492

பொன்னி

PONNI 10-8-51

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
AUG 1951
MADRAS

பரந்து விரிந்துகிடக்கும் அண்டை நாட்டு இலக்கியச் செல்வங்களை, நல்ல தமிழில் செந்தமிழர் இல்லந்தோறும் வாரி வழங்க, திங்கள் தோறும் விருந்து வருகிறது. உலகிற் சிறந்த சிறுகதைகள்! சுவை மல்கும் முழு நாவல்கள்! அற்புதமான கற்பனைக் காவியங்கள்! அழகான நாடகங்கள்! ஒப்புயர்வற்ற நகைச் சுவை ஓவியங்கள்! கலைநயம் கமழ, கருத்தாழம் ததும்ப, உலக இலக்கிய அறிஞர்களின் உளப் படப்பிடிப்பாக, ஒப்பற்ற இலக்கிய விருந்தாக ஒவ்வொரு மாதமும் "விருந்து" மிளிரும்.

விருந்து

மாதம் ஒரு புத்தகம்

தனிப்பிரதி அணா 8.

★

பதிப்பாசிரியர்:

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை M. A., L. T.,

முதல் புத்தகம் ஆகஸ்ட் 15—ல் மலர்கிறது

★

விவரங்கட்கு:

பொன்னி லிமிடெட், சென்னை-21.

1st Prize winners of C. No. 55. (1) M. Meenakshiammal, Salem (2) Suganchand Ratanlal, Hazaribagh & (3) U. Perumalswami Naidu, Tanjore. In addition 7 persons are awarded III prize and 6 the 5th prize.

Full particulars are published in the Rainbow dated 10—8—51

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
AUG 1951
MADRAS

ரிஜிஸ்டர் நெ. 249 **ரூ. 25,000 பரிசு** போட்டி நெ 57

M/S Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000. முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும்.

RAINBOW COMPETITIONS
KEY S. NO. 55 *71 TO 86 = 314

79	76	77	82
74	85	84	71
86	73	72	83
75	80	81	78

We hereby certify that the above is the solution in original deposited with us by *Rainbow Competitions* No. 55 on 9-7-51 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd.

V. Ramam... 28/7/51
Agent, Madras.

முடிவு தேதி 27–8–51 விடை 12–9–51

பிரவேசக் கட்டணம் : கூபன் 1-க்கு ரூ. 1-0-0 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5-0-0

346

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 79 முதல் 94 வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் 346 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதைக் கூபன்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

THE RAINBOW COMPETITIONS No. 57

18 (14) Thandavaraya Gramani Street, Tondiarpet, MADRAS - 21

பொன்னி 10–8–51

211,847 PO
151.5.11

பா. கண்ணன் தீட்டிய

ரஷ்யாவில் அறிஞர் அண்ணாதுரை 0 – 4 – 0

பூரித்த முத்தம் (அச்சில்)

மா. தங்கவேலர் தீட்டிய

நற்பணியாளர்கள் 0 – 8 – 0

ஊருக்கு உழைத்தவர்கள் 0 – 5 – 0

சட்டம் யாருக்கு? 0 – 4 – 0

A. V. P. ஆசைத்தம்பி தீட்டிய

ஆசைத்தம்பியின் அறைகூவல் 0 – 3 – 0

நாம் இருவர் 0 – 3 – 0

மாவண்ணா தீட்டிய

பம்பாய் அல்வா 0 – 4 – 0

பித்தன் தீட்டிய

சமூகத் துரோகிகள் 0 – 4 – 0

நாமும் அவர்களும் (அச்சில்)

தமிழ்வாணன் தீட்டிய

காதல் பைத்தியம் 0 – 5 – 0

மல்லிகா (அச்சில்)

S. N. ராஜன் தீட்டிய

காதலின் கண்ணீர் (அச்சில்)

○

விற்பனையாளர்களுக்கு 25% கழிவு.
அனுப்பும் செலவு இலவசம்.

○

விவரங்கட்கு:

ஓவியப்பண்ணை

சென்னை — 5.

வீட்டிலேயே அச்சடிக்கும் பாக்கட் பிரஸ்



பெயர், முகவரி, காகித லேபில்கள், ஹாண்டு பில்கள், நிகழ்ச்சிப் பத்திரங்கள் முதலியனவற்றை ஒஷி பிரஸ்ஸில் நேர்த்தியாக அச்சடிக்கலாம். ஒவ்வொரு வீட்டுக்கும் இன்றியமையாதது.

நெ. 1. ரூ. 2-0-0 நெ. 2. ரூ. 2-8-0 ஸ்பெஷல் ரூ. 3-0-0 சிறந்த ரகம் ரூ. 3-8-0 பெரிய அளவு உயர்ந்தரகம் ரூ.6-0-0 தபால் பாக்கிங் செலவு அணா 15.

உயர்ரகக் கைக்கெடிகாரங்கள்

ஸ்விஸ் தயாரிப்பு 12 வருஷ உத்தரவாதம் 5 ஜுவல் குரோமியம் கேஸ் வட்ட ஷேப் ரூ 16—8—0 சிறந்தது ரூ. 17-8-0 நீண்ட சதுர குரோமியம் கேஸ் 7 ஜுவல் ரூ. 21-0-0 ரோல்டு கோல்டு 15 வருஷ உத்தரவாதம் 9 ஜுவல் ரூ. 25-0-0 சிறந்தது ரூ. 27-0-0 ஸ்பெஷல் 15 ஜுவல் ரூ. 26-0-0 சென்டர் செகண்ட் ரூ. 19-0-0 பாக்கட் வாட்ச் ரூ. 12-0-0 அலாரம் டைம்பீஸ் ரூ. 17-0-0 சிறந்தது ரூ. 19-0-0 தபால் செலவு ரூ. 1-4-0.

GREAT NATIONAL STORES
(P. P.) POST BOX No. 12216.
CALCUTTA (5)

பொன்னி

பொருளடக்கம்

மலர் 5 | ஆகஸ்ட் 10, 1951 | இதழ் 11

திருவள்ளுவர் ஆண்டு 1982 ஆடித் திங்கள் 25-ம் நாள்

போருக்குக் காரணம்	...	நேரு	3
ஆனந்தத் தாண்டவம்	....	கார்ட்டூன்	4
காஷ்மீரம்	....	தலையங்கம்	5
காலமும் கருத்தும்	....		6
நமக்குள்ளே	....	சுகி	11
ஆடும் மாடும்	....	டி. கே. சீனிவாசன்	17
ராஜுவின் கால்சட்டை	....	சுட்டி	25
கணவனின் காதலி	....	ராஜேஸ்வரி	30
வருவீர் அத்தான்	....	புதுமைவாணன்	38
பேரரசனும் சிறுமியும்	....	மு. அண்ணாமலை	40
வெறும் கலாட்டா	....	கில்லாடி	55
யாருக்கு உங்கள் வாக்கு?	....	கடிதங்கள்	59

போருக்குக் காரணம்

போர் என்பதே தவறானது; நாசமானது. அதனால் சொல்லொணாத் துன்பம் விளையும். உலகம் முழுவதிலும் உயர்ந்த பதவிகளில் சுகமாக உட்கார்ந்து கொண்டுள்ள ஆசாமிகளே சவால்கள் விடுக்கின்றனர்; ஏதாவது முடிவுகள் செய்கின்றனர், யுத்தம் வந்துவிடுகிறது. ஆனால் போரினால் ஏற்படும் கொடுந் துன்பங்களையும், விளைவுகளையும் கோடிக் கணக்கான பொதுமக்களே அனுபவிக்க வேண்டியிருக்கிறது. உயர்ந்த பதவிகளில் உள்ளவர்கள் போரினால் பாதிக்கப்படாமல் சௌகரியமாக உட்கார்ந்து கொண்டிருக்கின்றனர்.

[பாகிஸ்தான் பிரதமருக்கு இந்தியப் பிரதமர் நேரு
அளித்துள்ள பதிலில் இவ்வாறு குறிப்பிடுகிறார்]

ஆனந்தத் 'தாண்ட'வம்!

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
197778

காஷ்மீரம்

காஷ்மீர்த் தொல்லை முற்றி வளர்ந்து, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் காஷ்மீர் காரணமாகப் போர் ஏற்படுமோ என்ற பயங்கர நிலை ஏற்பட்டிருக்கிறது! எல்லையில் பாகிஸ்தான் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும், எந்த வித ஆபத்தையும் சமாளிப்பதற்காகக் காத்துக்கொண்டிருக்கின்றன. இந்த முன்னெச்சரிக்கை, இரு தேசத்திற்கும் பயங்கரப் போரில் முடியுமோ என்று உலக நாடுகள் அஞ்சுகின்றன.

லியாகத் அலிகான் சமாதானத் திட்டம் ஒன்று தந்தார்; 'படைகளை எல்லையிலிருந்து வாபஸ் வாங்கிவிட்டுக் கராச்சிக்குப் பேச்சுவார்த்தை நடத்த வருக' என்று நேருவை அழைத்தார். 'நிபந்தனையோடு பேச்சுவார்த்தை நடத்துவது இயலாது; நான் எதும் நிபந்னை விதிக்கவில்லை. தாங்கள் டில்லிக்கு வரலாம்' என்று பதிலழைப்பு விடுத்தர் நேரு. லியாகத் மீண்டும் தம் 'வீறுப்புரை'யையே வீசியிருக்கிறார். இவ்வாறு பதில் ஒருவருக்கொருவர் பரிமாறப்பட்டு வருகிறது. இந்நிலைமை மாறிப் போர் தொடங்காமலிருக்க இரு தேசத் தலைவர்களும் எச்சரிக்கையாயிருப்பது அவசியம்.

காஷ்மீர் பிரச்னைதான் இத்தனை தொல்லைகட்கும் காரணம். பாகிஸ்தான், காஷ்மீர் தன்னுடைய பகுதி என்று வாதிக்கிறது, இந்தியா, காஷ்மீர் தன்னோடு இணைந்து விட்டது என்று நிலைநாட்டப் பார்க்கிறது. ஐ. நா. சபை இந்தப் பிரச்னையை எவ்வளவு குழப்ப முடியுமோ அவ்வளவு குழப்பி விட்டிருக்கிறது. காஷ்மீரைக் கைப்பற்றப் பாகிஸ்தான் போர் தொடுத்தவுடன்தான் வினை மூண்டது; காஷ்மீர் இந்தியாவில் இணைந்தது; இந்தியப் படைகள், காஷ்மீரைக் காப்பாற்ற

விரைந்தன. நிலைமையை ஐ. நா. சபை ஒருவாறு கட்டுப்படுத்திப் போரை நிறுத்திற்று. இப்போது பாகிஸ்தான்வசம் காஷ்மீரத்தின் ஒரு பகுதியும், ஷேக் அப்துல்லா நிர்வாகத்தில் மற்றொரு பகுதியும் இருக்கின்றன. ஷேக் அப்துல்லா அரசியல் நிர்ணய சபையைக் கூட்ட முயற்சிகள் செய்து வருகிறார். இந்நிலையில் பாகிஸ்தானுக்குப் பொறுத்திருக்க முடியவில்லை. இரண்டிலொன்று தீர்மானித்து விடுவதென லியாகத் அலிகான் முடிவு செய்திருப்பதாகவே தெரிகிறது. காஷ்மீரைப் போரிட்டேனும் கைப்பற்றி விடுவதெனப் பாகிஸ்தான் நினைக்குமானால், அதைப்போலப் பைத்தியக்காரத்தனம் வேறொன்றுமில்லை. பிரிட்டிஷ்காரர்கள் சிலர் பாகிஸ்தானில் நடமாடுவதாகச் செய்திகள் வருகின்றன. பாகிஸ்தானின் போர்க் கோலத்திற்கு அவர்கள் காரணமாயிருக்கலாமென்றும் கூறப்படுகிறது. நேரு தந்துவரும் அறிக்கைகளுக்கும், லியாகத் பேசும் போக்குக்கும் மிகுந்த வேறுபாடு இருக்கிறது. மேலும் பாகிஸ்தானிலிருந்துவரும் செய்திகள் பெரிய போருக்கு அவர்கள் தயாராவதைத்தான் தெரிவிக்கின்றன. இத்தகைய பரபரப்புக்குக் காரணமென்ன என்பது நமக்கு விளங்கவில்லை. பாகிஸ்தான் பிரதமர் லியாகத் இச்சமயத்தில் நிதானம் இழக்காமல் நடந்துகொள்வாரென்று நம்புகிறோம். இந்தியாவைப் பொறுத்தவரையில் வலுவில் தாக்கமாட்டோம் என்ற உறுதியை நேரு தந்திருப்பதைப் போல, லியாகத் அலிகானும் தந்துவிட்டு இருவரும் சந்தித்துப் பேசுவதுதான் காஷ்மீர் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைத் தவிர்க்க உதவுவதாகும்.



தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்

காலமும் கருத்தும்

ஆறு அவுன்ஸ்

ஆகஸ்ட் பதினைந்து சுதந்தரம் கிடைத்த நாளல்லவா? அதன் நினைவாகச் சென்னை சர்க்கார் அரிசிப் பங்கீட்டை எட்டவுன்ஸ் அளவிலிருந்து ஆறு அவுன்ஸாகக் குறைத்திருக்கிறார்கள். ஏழு அவுன்ஸ் எட்டவுன்ஸாகி இன்னும் நான்கு மாதம்கூட ஆகவில்லை. அதற்குள் 'ஆறு அவுன்ஸ்' நிலைக்குச் சர்க்கார் மக்களைத் தள்ளிவிட்டிருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்களை 'ஆறு அவுன்ஸ்' என்று பட்டப்பெயர் சூட்டி அழைத்தார்கள் மாற்றுக் கட்சித் தோழர்கள்! மாற்றுக் கட்சித் தோழர்களின் இந்தத் தந்திரத்தைத் தோற்கடிக்கவோ என்னவோ, அரிசி ரேஷன் ஏழவுன்ஸ், எட்டவுன்ஸ் என்று வேகவேகமாக உயர்ந்தது! காங்கிரஸ்காரர்களின் பட்டப்பெயரை, உயர்ந்துவரும் ரேஷனுக்கு ஏற்ப உயர்த்திக்கொண்டு வரும் பைத்தியக்காரத்தனத்தை மாற்றுக் கட்சித் தோழர்கள் ஏன் கையாளாமல் இருந்தார்கள் என்பது இப்பொழுதுதான் புரிகிறது! படியளக்கும் பெருமான்கள் 'ஆறு அவுன்ஸ்' அளவுக்கு விரைவில் இறங்கிவிடுவார்கள் என்று அவர்கள் நம்பியதில் குற்றமென்ன இருக்கிறது! அவர்களின் தீர்க்க தரிசனத்தைப் பாராட்ட வேண்டியிருக்க, சென்னை சர்க்காரை நோவதில் பயனென்ன காண முடியும்? சென்னை சர்க்காரைக் கேட்டால், 'கோதுமையைக் கப்பல் கப்பலாகத் துறைமுகங்களில் குவிக்கும் முன்ஷி, அரிசி என்று கேட்டால் அடங்கி ஒடுங்கி விடுகிறாரே' என்று தங்கள் பொறுப்பை முன்ஷிமீது சுமத்தி விடுவார்கள்! முன்ஷியிடம் முறையிட்டாலோ, 'அமெரிக்கா கோதுமை தர முன் வருகிறதே ஒழிய அரிசி யருளவில்லையே' என்று அமெரிக்காமீது பழியைப் போட்டுவிடுவார்! எனவே குற்றமெல்லாம் நெல்லை விளைவித்து நமக்கு ஏற்றுமதி செய்யாத அமெரிக்காவையே சாருகிறது! அப்படியிருக்க, சென்னை சர்க்கார் என்ன செய்வார்கள்? முன்ஷி என்ன செய்வார்? காங்கிரஸ்காரர்கள்தான் என்ன செய்வார்கள்? 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்று திருப்தியடைய நமக்கு வழி தெரியும்வரை நமக்கு ரேஷன் ஆறு அவுன்ஸ்தான்! அதைவிடக் குறைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மூடத்தனம்

மூட நம்பிக்கையும் குருட்டுப் பழக்க வழக்கங்களும் நம் நாட்டில் எவ்வளவு தொல்லைகளை விளைவித்து வருகின்றன என்பது நாம் அறியாததன்று. 'சாப்பிட்டு முடிக்கும்போது இலையில்

சிறிது உணவை வைத்துச் செல்லவேண்டும்' என்பது பழங் காலப் பழக்கங்களில் ஒன்று. இந்தப் பழக்கம் என்ன கருத்தில் ஏற்பட்டதோ நாமறியோம். ஆனால் இந்த மூடத்தனத்தால் இந்தியாவில் தற்சமயம் 20 லட்சம் டன் உணவுப் பொருள் வீணாகிறது என்று முன்ஷி குறிப்பிட்டிருப்பதென்னவோ உண்மை! மூடத்தனம் விளைக்கும் நாசத்திற்கு இது ஒரு உதாரணம்; மற்றொன்றும் கேட்பதற்கு விநோதமாயிருக்கிறது. பீஹார், உத்தரப்பிரதேசம் முதலிய ராஜ்யங்களில் 28 லட்சம் பெண்கள் ஓட்டுரிமை இழந்திருக்கிறார்கள்! காரணம் அவர்கள், தங்கள் பெயரைப் பதிவு செய்ய வந்த அதிகாரிகளிடம் கூற மறுத்ததுதான். அந்த ராஜ்யங்களில் பெண்கள் தங்கள் பெயரைப் பிறரிடம் சொல்லக் கூடாது என்ற மாதிரியில் ஏதாவது சமூகப் பழக்கம் இருக்கலாமோ என்னவோ! இந்த அற்புதப் பழக்கம், இருபத்தெட்டு லட்சம் பெண்களின் வாக்குரிமையைப்பறிகொடுக்கச் செய்திருக்கிறது. உலகம் கேட்டு நகைக்கும்படி இத்தகைய விநோதச் செய்திகளைப் பரப்பக் காரணமாயிருக்கும் மூடப் பழக்க வழக்கங்கள் அடியோடு ஒழியும் நாள் எந்நாளோ?

கித்வாய் ராஜினமா

"தாண்டன் பெருமூச்சு விட்டார்! அப்பாடா! சனியன் ஒழிந்தது!" கித்வாய் காங்கிரஸிலிருந்து விலகியதோடு, நேரு மந்திரி சபையிலிருந்தும் ராஜினமாச் செய்துவிட்டார் என்ற செய்தி வந்தபோது, நண்பரொருவர் மேற்கண்டவாறு 'செய்தி விமரிசனம்' செய்தார். கித்வாய் விவகாரம் இமயமலை அளவு பெரிதுபடுத்தப்பட்டுக் காங்கிரஸ் வட்டாரத்திற்கே பெரிய தலைவலியாக இருந்து வந்தது. அது இப்போது ஒருவாறு முடிந்திருக்கிறது! 'ஆனல் நேரு தம் இணையற்ற நண்பர்களைக் காங்கிரஸ் தலைவர் தாண்டனுக்காகப் பறிகொடுக்க நேர்ந்திருக்கிறது' என்று கூறப்படும் செய்திகளையும் நாம் மறக்க முடியாது. காங்கிரஸ் ஸ்தாபனம் நேருவிடமிருந்து படிப்படியாகத் தாண்டன் கைக்கு மாறுகிறதென்ற உண்மைதான் நன்கு புலப்படுகிறது. நேருவை நம்பியிருக்கும் காங்கிரஸ்காரர்கள் இந்த 'அபாயத்தை'ச் சரிவர உணர்ந்ததாகத் தெரியவில்லை. உணர்ந்தவர்களான கித்வாய் முதலியவர்களோ காங்கிரஸை விட்டு வெளியேறிப் புதுக்கட்சி அமைப்பதைத் தவிர, வேறு வழியில்லை என்றாகியிருக்கிறது! இந்நிலையில் கிருபளானியின் புதுக்கட்சியின் திட்டங்களும் நடைமுறைகளும் மக்களைக் கவரமுடியுமா என்பதும் புரியவில்லை. புதுக்கட்சி அமைக்க முன்வந்த பெரிய நபர்களில் ஒருவரான ரங்கா, பிரஜா கட்சி உருவாவதற்குள்ளேயே கருத்து வேறுபாடு காரணமாக மற்றொரு புதிய கட்சியை ஆரம்

பிக்கப் போகிறாராம்! இவர்கள் போக்கைப் பார்க்கும்போது 'ஆளுக்கொரு கட்சி' ஏற்படும் வரை இவர்கள் ஆர்வம் குன்றாதென்பது திண்ணம் என்றே முடிவுகட்ட வேண்டியிருக்கிறது. எனவே கித்வாய்க்குத் தரப்படும் விளம்பரம் நாட்டு மக்களை நம்பவைத்து ஏமாற்றுவதில்தான் முடியப் போகிறது! வேறு எந்தப் பயனும் கூடிவரப் போவதில்லை.

ஓமாந்தூர் அறிக்கை

பழனியில் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடந்து முடிந்திருக்கிறது. பிரதேசத் தேர்தல் கமிட்டியிலிருந்து ஓமாந்தூர் ரெட்டியார் தாம் விலகிக் கொண்டதற்குக் காரணங்களை விளக்கி ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்; அந்த அறிக்கைக்குத் தோழர் காமராஜர் பதில் தந்திருப்பதும் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. ரெட்டியார் 'காந்தியார் கண்ட கனவு' எப்படிக் கனவாகவே முடிந்துவிட்டதென்பதைத் தம் அறிக்கையில் நன்கு விளக்கியிருக்கிறார். சுயராஜ்யம் வந்த பின்னர், காங்கிரஸ்காரர்கள் 'பதவிப்பிரியர்'களாக மாறிவிட்டார்கள் என்பதையும், லஞ்ச ஊழலும், கள்ளமார்க்கட்டும், பித்தலாட்டங்களும் காங்கிரஸ்காரர்களின் 'திருவிளையாடல்களாகி' விட்ட விதத்தையும் அந்த அறிக்கை நன்கு வருணிக்கிறது. தோழர் காமராஜர் வழக்கமான பாஸிஸத் தோரணையில் பதிலளித்திருக்கிறாரே ஒழிய ரெட்டியார் அறிக்கையில் கண்ட குற்றங்களை மறுக்கவில்லை; மழுப்பிவிட்டிருக்கிறார்; அந்தக் குற்றங்களுக்கு ரெட்டியாரும் தான் காரணமென்று பழியைப் பங்கு போட்டிருக்கிறார்; மந்திரிப் பதவி ஆசைபிடித்தவர் என்று ரெட்டியாரை மறைமுகமாகக் கிண்டல் செய்கிறார். அதோடு தோழர் காமராஜரின் பணி முடிந்துவிட்டது. ஆனால் ரெட்டியார் என்ன செய்யப் போகிறார் என்பது யாருக்கும் விளங்காத புதிராக இருக்கிறது! தோழர் காமராஜர் கையில் காங்கிரஸை ஒப்படைத்து விடுவதன் மூலம், தம் கடமை நிறைவேறிவிட்டதென்று அவர் கருதுகிறாரா? அல்லது 'அறிக்கை தந்துவிட்டோம்; நாட்டு மக்கள் பாடு; காங்கிரஸ் பாடு' என்று வாய்பொத்திச் சும்மாயிருக்கப் போகிறாரா? அநியாயக்காரர்கள் என்று பிறரைக் குற்றம்சாட்டுபவர்கள் நியாயத்தை நடத்திக் காட்ட முன்வந்தால்தான், அநியாயக்காரர்களின் கொட்டம் அடங்க வழி பிறக்கும். இந்தச் சாதாரண விஷயம் ரெட்டியாருக்குத் தெரியாதென்று சொல்ல முடியாது! அவருடைய அடுத்த நடவடிக்கை என்ன என்று கேட்பவர்களுக்கு ஓமாந்தூரார் பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்.

வேலை நிறுத்தங்கள்

ஜெயப்பிரகாஷ் 'ரயில்வே ஸ்டிரைக்' முழக்கம் செய்து

கொண்டிருக்கிறார். தந்தி தபால் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்யவேண்டுமெனத் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். பாங்க் ஊழியர்களும் இந்த அரிய சந்தர்ப்பத்தில் தாங்களும் ஸ்டிரைக் நடத்தலாம் என்று முடிவு கட்டியிருக்கிறார்கள். இன்னும் என்னென்ன ஸ்டிரைக் இந்த ஆகஸ்ட் மாதத்தில் உருவாகுமோ, தெரியாது! ஆனால் "ரயில்வே வேலை நிறுத்தம் பேச்சு வார்த்தை'க்காக ஒத்தி வைக்கப்படலாம்; தபால் தந்தி ஊழியர்களும், பாகிஸ்தான் மிரட்டலை உத்தேசித்துத் தங்கள் கோரிக்கைகளைச் சில மாதங்கட்குத் தள்ளிப் போடலாம்; பாங்க் ஊழியர்களும் மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக ஸ்டிரைக்கை நிறுத்தி வைக்கலாம்!" வேலை நிறுத்தம் நடைபெறும் என்ற பயத்தோடு இந்த நம்பிக்கையும் நாட்டில் நிலவுகிறது. காரணம், அந்த ஊழியர்களும், அவர்களை இட்டுச் செல்லும் தலைவர்களும், அவர்களைக் கவனிக்க மறுக்கும் சர்க்காரும் நடந்துகொள்ளும் மாதிரியில்தான் அடங்கியிருக்கிறது! நல்ல வருமானத்தைக் கொட்டித் தரும் ரயில்வே இலாகா, தன் ஊழியர்கட்கு அவர்கள் விருப்பப்படி சலுகைகளைத் தந்தால் என்ன குறைந்துவிடப் போகிறதென்பதுதான் நமக்குப் புரியவில்லை. தபால் தந்தி ஊழியர்களிடத்தில், இந்திய சர்க்கார் தாராளமாக நடந்துகொள்ளத்தான் வேண்டும். பாங்க் ஊழியர்கள் கஷ்டப்படுகிறார்களென்பது 'பாங்க்' என்ற பெயருக்கே அவமானம் தருவதாக இல்லையா? அந்தப் பழிச் சொல்லைத் துடைப்பது பாங்குகளின் பொறுப்பு என்பதையும் நாம் கூறவேண்டியதில்லை! இப்படி இரு சாராரும் சுலபமாகப் பிரச்னைகளைத் தீர்த்துக்கொண்டு விட்டால் 'வேலை நிறுத்தம்' என்ற பேச்சுக்கே இடமிராதல்லவா?

பேச்சு வார்த்தை

கொரியாவில் நடப்பது சண்டையானாலும் சரி அல்லது சமாதானமானாலும் சரி—அது 'வழவழ'வென்று பல மாதங்களுக்கு நடக்கும் போலும்! கொரியாவில் கேஸாங்கில் நடக்கும் சமாதானப் பேச்சு வார்த்தைகள் இந்த அரிய உண்மையைத்தான் எடுத்துக் காட்டுகின்றன! டாங்கிகளோடும், குண்டுகளோடும் போர்முனையில் சந்தித்துப் போர் புரிந்த தளபதிகள் தற்சமயம் 'பேச்சு வார்த்தைகள்' நடத்துவதற்காகக் 'கோரிக்கைகள்' சகிதம் சந்திப்பு நடத்தி வருகிறார்கள். கொரியாப் போர் எப்படிச் 'சடுகுடு' விளையாட்டைப் போல் முன்னேறுவதும் பின்னேறுவதுமாக விளங்கியதோ, அதே அச்சில் இந்தச் சமாதானப் பேச்சும் நடப்பதுதான் விந்தையாயிருக்கிறது! போரை நிறுத்துவதென முடிவு செய்துவிட்ட தளபதிகள், 'எங்கே நிறுத்துவது?' என்ற பிரச்னையில் மனமொத்துப் போகாமல் முட்டுக்

கட்டை போட்டு வருகிறார்கள்! நிலைமையைப் பார்த்தால் கேஸாங் பேச்சு வார்த்தைகள் இரு பகுதியினருக்கும் 'இடைவேளை' தந்தது போல் ஆகி மறுபடியும் போர் மூளுமோ என்றும் எண்ணவேண்டியிருக்கிறது!

விருந்து

ஆகஸ்ட் பதினைந்தில் 'பொன்னி' தமிழ் நன்மக்களுக்கு வழங்கவிருக்கும் 'விருந்து' பற்றிய செய்திகள் நண்பர்கள் அறிந்ததே. உலக இலக்கியச் செல்வங்களைச் சிறு சிறு புத்தகங்களாகத் தமிழில் வழங்கவே 'விருந்து' தொடங்கப்படுகிறது. இப்பெரும் பணியில் முழுப் பொறுப்பேற்றுக்கொள்ளப் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை எம்.ஏ. எல்.டி. அவர்கள் இசைந்திருப்பது எங்கள் பெரும் பேறாகும். அன்னாரின் பன்மொழிப் புலமையும், பரந்த நூலறிவும் 'விருந்து' வரிசை சிறப்புற்றுத் திகழ உதவுமென்பதைக் கூறவும் வேண்டுமா? பிற மொழிகளில் சிறந்து விளங்கும் நாவல்கள், நாடகங்கள், சிறுகதைகள் முதலிய அனைத்தையும் தனித்தனிச் சிறு புத்தகங்களாகத் தரவிருக்கும் 'விருந்து' அமைப்பில் ஆங்கிலத்தில் வெளிவரும் 'பென்குவின் சீரிஸ்' போன்று விளங்கும். 'விருந்து' பத்திரிகை அல்ல, குறிப்பிட்ட தேதியில் வெளிவரும் புத்தகமே என்பதற்கு இந்த விளக்கமே போதுமானது; 'விருந்து' வரிசையில் வெளிவரும் ஒவ்வொரு புத்தகமும், குடும்பத்திலுள்ள ஆண், பெண் அனைவரும் விரும்பிப் படிக்கும் வகையில் அமைவதோடு, தொடர்ச்சியாகப் பேணிப் பாதுகாக்கும் சிறப்பும் பெற்றிருக்கும் என்பதையும் எடுத்துக் காட்ட விரும்புகிறோம்; 'பொன்னி'யைக் கடந்த ஐந்தாண்டுகளாகப் போற்றி வளர்த்து வரும் நண்பர்கள் 'பொன்னி' தரும் 'விருந்தை'யும் ஏற்று மகிழ வேண்டுகிறோம்.

திருவள்ளுவர் இளைஞர் கழகம்

"தேர்தலும் மக்கள் கடமையும்" என்பது குறித்து, தோழர்கள் கா. வேள்பாரி, கோ. முத்து, கோ. குமாரசாமி, அறிஞர் அப்பாத்துரை ஆகியோர் சென்னை மண்ணடி, புதுத் தெரு திருவள்ளுவர் இளைஞர் கழகச் சார்பில் 29—7—51 அன்று நடைபெற்ற கழகக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினர். திராவிட இயக்கம் தேர்தலில் பங்குபெற வேண்டிய அவசியம் குறித்துச் சொற்பொழிவாளர்கள் வற்புறுத்திப் பேசினர். தலைமை தாங்கிய தோழர் முருகு சுப்பிரமணியன் ஒவ்வொரு வட்டத்திலும் வாக்காளர்கள் சங்கம் நிறுவ வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார்.

நமக்குள்ளே

சுகி

1

தம்மைப்பற்றிப் பெரிதாக — இமயமலையாக — நினைத்துக் கொள்வது நம்மில் பலருக்கு வழக்கம்! இந்தத் திருக்கூட்டத்தில் என்னைச் சேர்க்க வேண்டாம். நிபுணன், குறிப்பிட்ட தொழிலில் சூரப்புலி என்று விளம்பரம் செய்து கொள்ளும் படி என்னிடம் எந்தத் தன்மையும் முனைப்பாகக் கிடையாது. எந்தத் துறையிலும் நான் ஆராய்ச்சி செய்யும் திறமையற்றவன்; உங்களைப் போன்ற மனிதத்தன்மை எனக்கும் இருக்கிறது! ஆனால் இதை எந்த மேடைமீது ஏறியும் எனக்குச் சொல்லுந் திறன் இல்லை; பயம்! நாலு சுவர்களுக்கு ஊடாகப் பேனா பிடித்துவிட்டால், நானே ராஜா; நானே மந்திரி; நானே பொதுஜனம்!

*　*　*

உயர்ந்த இலக்கியங்களைப் படித்தால், செல்வத்தை நாம் துச்சமாக நினைக்கலாம்; அதிகம் படித்தால் அச்செல்வத்தைச் சம்பாதிக்க வழி தெரியாமலும் போகலாம்.

*　*　*

அரசாங்கத்திற்கும் வரிக்கும் எவ்வளவு சம்பந்தம் உண்டோ, அவ்வளவு சம்பந்தம் எனக்கும் எழுதும் பேப்பருக்கும் உண்டு. என்னிடம் ஒரு குறைபாடு. அரசாங்கத்தைப் போல அதிகமாக வரிகளை அடைத்துக் கொள்ள மாட்டேன்; தமாஷா வரியைக் கொடுப்பது தமாஷான காரியமன்று. மிகவும் கசப்பான காரியம் தமாஷா வரி; ஆனால் இங்கே தமாஷா வரிகளை நிறையக் கொடுப்பதில், நான் சிக்கன புத்தியுடன் நடக்க வேண்டியிருக்கிறது.

என்னை அரசாங்கத்தோடு ஒப்பிடுவதால், கொடுப்பதை விடப் பறிப்பது அதிகமென எண்ணி விட வேண்டாம். நான் யாருக்கும் குழிபறிப்பதில்லை; எதையும் பிரசாரம் செய்வதில்லை; என்னை நம்பிக் கெட்டவர்கள் அதிகமா, வாழ்ந்தவர்கள் அதிகமா என்றும் சொல்ல முடியாது. அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளை நம்புகிறவர்கள், கறுப்பு மார்க்கெட்டுக்காரர்கள்; ஆதாயமடைகிறவர்கள் அவர்கள். அதுபோல என்னை நம்பி யார் வாழ முடியும்? நான் வேறு; அரசாங்கம் வேறு. மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் எங்களுக்குள் இருக்கிறது. நான் கடன் வாங்கினால், அது என் சந்ததியைப் பாதிக்கும்; அரசாங்கம் வாங்கினால், பிறக்கப் போகும் இந்நாட்டு மக்களைப் பாதிக்கும். கடன் விஷயத்தில் என்னைவிட அரசாங்கம் பெரிது! பெரிது! பெரிது! கடன் என்ன,

எந்தவிதத்திலும் அரசாங்கம் என்னைவிட மிகப் பெரிது என்றே தோன்றுகிறது. என்னுடைய சிறுமையை அரசாங்கத்தோடு நின்றே நான் உணர முடிகிறது!

* * *

வரிகளும், சட்டங்களும் விருத்தியாகின்றனவே தவிர, மக்கள் மனமும் வாழ்க்கை நிலையும் மாறிவிட்டதாகச் சொல்ல முடியாது.

* * *

பொதுஜன சேவை செய்ய வேண்டும் என்ற நல்ல நோக்கம் எனக்கு இருக்க வேண்டும்; இதைப் பலரும் சொல்லுகிறார்கள். பொதுஜன சேவையில் ஈடுபட்டவர்கள் பலர் வாழ்க்கையை நான் கவனித்திருக்கிறேன். அவர்கள் நோக்கம் சுயதேவைப் பூர்த்தி. என் போன்ற தனி மனிதனாக இருந்தவர் இப்போது பலமனிதராக இருக்கிறார்; பொதுஜன சேவைக்கு நல்ல மதிப்பு இருக்கிறது; பலப்பலஸ்தாபனங்கள், வியாபார நிலையங்கள், சங்கங்கள் வந்து தலை வணங்குகின்றன. பொதுஜன சேவகரை மேலும் மேலும் முன்னுக்குக் கொண்டு வருகிறார்கள். அவர் சும்மா இருந்தாலும் மற்றவர்கள் அவரை அஜீரணத்திற்கு ஆளாக்குகிறார்கள்; பணத்தை அபிஷேகம் செய்து பன்னீரால் நனைக்கிறார்கள்; மனிதன் இதயத்தில் வளர்ச்சி இல்லாது குறுகிப் போகிறார்; ஆனால் எட்டுத் திக்குகளிலும், அவர், அவருடைய பணம் விரவிக் கிடக்கிறது; நடந்து இரும்புக் குண்டாக இருந்தவர், பம்பளிமாஸ் பழமாகத் தொள தொளவென ஆகிவிடுகிறார். மூச்சு விடுவதை நிறுத்திப் பெருமூச்சே இயல்பாகிறது! அவர் மூச்சு விட முடியாத அவஸ்தையேற்படுகிறது! பாவம். கண்காணாமல், மலைகளுக்குள் போய்க் கோடைக்குப் புகுந்துகொள்ளுகிறார். பொதுஜன சேவை என்பது, நாம் பொது ஜனங்களுக்குச் செய்யும் சேவையாக இருக்கவேண்டுமல்லவா? நம்வாழ்விலே எப்படி இருக்கிறது?

... பணத்தை அபிஷேகம் செய்து ....

பொது ஜனங்கள் ஓடிவந்து தனி மனிதனுக்கு மாலையிட்டு மண்டியிட்டு மதியிழந்து செய்யும் சேவையாக இருக்கிறதே இந்தப் பொதுஜன சேவை! நான் இதை ஒப்புக்கொள்ளமாட்டேன். பிறர் தயவால் வாழும் பெருமை, எனக்கு வேண்டாம். நான் பிறர் உழைப்பைப் பங்கு கேட்கும் உத்தமோத்தமன் அல்ல. என் உழைப்பில் வாழ நினைக்கும் என்னை, ஒரு முகமாக இருப்பவனை ஆறுமுகமாக்கும் பொதுஜன சேவைக்கு அழைக்க வேண்டாம் என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

* * *

பிறருக்குப் பணியாளனென்று சொல்லிக்கொண்டு உனது திருப்பணிகளைச் செவ்வனே செய்தால், உலகம் உன்னுடையது; உனக்குப் பணி செய்வதாகச் சொல்லிக் கொண்டு ஊரை நீ கைவிட்டால், ஊராரும் உன்னைக் கைவிட்டுவிடுவார்கள்.

* * *

'பெயரில் என்ன இருக்கிறது? ரோஜாவுக்கு எந்தப் பெயர் சூட்டினால் என்ன? அதன் மணம் போய்விடுமா?' — இது உலக மகா ஆங்கிலக் கவி ஷேக்ஸ்பியர் வாக்கு. ரோஜா என்பது மணமான பொருள். மணத்திற்கு எந்தப் பெயரைச் சூட்டினாலும் தகும். அரசாங்கம் நாற்றமுடையதாயிற்றே, அதற்கு எந்தெந்தப் பெயர் பொருந்தும்?

சோஷலிஸம்: உன்னிடமுள்ளவை இரண்டு பசுக்கள்; ஒன்றை உனது அடுத்த வீட்டுக்காரனுக்குக் கொடு.

கம்யூனிஸம்: உன்னிடமுள்ளவை இரண்டு பசுக்கள்; இரண்டையும் சர்க்காரிடம் கொடுத்துவிடு; சர்க்கார் உனக்குப் பால் வார்க்கும்.

பாஸிஸம்: உன்னிடமுள்ளவை இரண்டு பசுக்களா? இரண்டு பசுவையும், அப்பனே நீ வைத்துக்கொள்; பாலை மட்டும் சர்க்காருக்குக் கொடு; அதில் ஒரு பகுதியைச் சர்க்கார் உனக்கு விலைக்குத் தரும்.

நாஸிஸம்: உன்னிடம் இரண்டு பசுக்கள் இருக்கின்றனவா? உன்னைச் சுட்டுப் பொசுக்கிப் பசுக்களைச் சர்க்கார் எடுத்துக் கொள்ளும்.

காப்பிட்டலிஸம்: உன்னிடம் இருக்கும் பசுக்களை விற்றுவிடு; நாங்கள் வைக்கோல் அடைத்த கன்றுக் குட்டி தருகிறோம்.

இந்த நாளில் பசுக்கள், பேப்பர் தின்னுவதைப் பார்க்கிறோம். இது நாகரிகத்தின் அழிவைச் சுட்டிக் காட்டுகிறது; 'தாம்'

... பசுக்கள் பேப்பர் தின்பதை ...

என்பதாக ஒவ்வொன்றுக்கும் உண்டு. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது என்பது உண்மை. மாடு பேப்பரைத் தின்பது இக்காலத்தில் வளர்ந்துள்ள பொருளாதாரம் போன்றது. நாட்டின் செல்வம் என்று கரன்ஸி நோட்டை வளர்த்துக்கொண்டால் அது செல்வமா? பணம் வளர்வதில்லை. பொருளே வளரும். ஒரு நெல்தான் ஒன்று பத்தாகக் கிளைக்கும், ஒரு ரூபாய், இன்னொரு ரூபாயாக ஆகாது; இதை மறந்து விட்டோம். ரூபாயோடு 'ரூபாய் பெருக்க ஆசை; நெல்லுக்கு நெல், தானியத்தோடு தானியம் வளர்க்கும் ஆசை கிடையாது. தானியம், விளைபொருள் இவையே பெருகுவன; பணம் தானாகக் குட்டி போடாது. அது மனிதனைச் சிந்திக்கத் தூண்டலாம்; அவன் சிந்தனைக்கு வழிதரலாம்; வயிற்றுக்கு வழிதருபவை விளைவுப் பொருள்கள்.

உலக ஓட்டத்தின் அமைப்பு, சிருஷ்டிப் பொருள்களைப் பொறுத்தவை. யார் அதிகமாகக் கரன்ஸி உற்பத்தி செய்கிறார்கள் என்பதல்ல; எவன் தானியம் விளைவிக்கிறானோ, எந்த நாட்டில் பாலும் தேனும் பெருகி ஓடுகிறதோ அது வளமான நாடு. நாய் வாலை வெட்டி வெட்டி, நாய்க்கு ஆகாரம் போடுவது வளர்ப்பு முறையாகாது. நாய்க்கு அதன் வாலை இரையாக்குவது தற்காலப் பொருளாதாரப் பிரச்னை; அரசியல் வஞ்சனை.



— நாய்க்கு மற்றொரு இறைச்சித் துண்டம் —

நாய்க்கு மற்றொரு இறைச்சித் துண்டம் வேண்டும். அதைக் கொடுப்பதே முறை.

இரண்டு பசுக்கள் இருக்கின்றனவா? மூன்று பசுக்களாக மாற்றுவது; நாலாக, பத்தாக உயர்த்துவதே உண்மையான அரசாங்கம். அது எந்தப் பெயரில் வந்தாலும் சரி!

* * *

அரசாங்கம் எனப்படுவது தன் சக்திக்கு அதிகமாக வாழ்வது மட்டுமல்ல; மக்களுடைய சக்திக்கும் அப்பால் வாழ்வை நடத்துவது.

* * *

இந்தப் புண்ணிய பூமியில், செலவினத்தில் மட்டும் நானும் அரசாங்கமும் ஒருவர் முதுகுக்கு ஒருவர் மண்காட்டக் கூடியவர்கள். ஒரு நாட்டுக்குச் செலவாளியே தேவை; சிக்கன புத்தி உள்ளவர்களால் பொருளாதாரம் தேக்கம் அடையும். இந்த நாட்டில் நானும் செலவாளி; அரசாங்கமும் செலவாளி. முன்னேற்றத்திற்கு வேறென்ன வேண்டும்?

கர்ப்பாசய ரோகங்களை நிவர்த்திக்கவல்ல சிறந்த ஔஷதம். ஸ்திரீகளுக்கு ஆரோக்கியமும், சந்தோஷமும் அளிப்பது.

தயாரிப்பவர்கள்:-

கேசரி குடீரம் லிமிடெட்,

மதராஸ் (14)

தமிழ்நாடு ஏஜண்டுகள்:

சீதாராமா

ஜெனரல் ஸ்டோர்ஸ்

மேலக் கோபரவாசல்

மதுரை

EASTERNS 378.

நன்னூலகம் வெளியீடு

இதுதான்

உங்கள் விருப்பத்திற்கேற்ற

கூந்தல் தைலம்

முன்னுரை : “எங்கேயிருந்தப்பா தேடிப் பிடித்தாய் இந்த அற்புதமான தலைப்பை?” என்று கேட்கத் தோன்றும் பலருக்கு, இதைப் படித்தவுடன்! ஆனால் அவர்களுக்குத் தெரியாது, ‘நான் இந்தத் தலைப்பைத் தேடிப் பிடிக்கவில்லை—அதுதான் என்னை நாடி ஓடி வந்தது’ என்ற உண்மை!

என் எழுத்துலக நண்பர் ‘இளமைப்பித்தன்’ சிந்தனையில் மலர்ந்த ‘உரிமை’ என்ற உருவகக் கதை, துர்ப்பாக்கியவதி ஒருத்தியின் உள்ளத்தைக் கிளறிவிட்டுத் துடிப்பைக் கொட்டியது. அழுதாள்—ஆனால் அனாதையாக! அதனால்தான் அது கவனிப்பாரற்றுப் போய்விட்டது!

‘காலிலே தைக்கும் முள்ளை விடக் கருத்திலே தைக்கும் முள்தான் கடுமையான வேதனையைத் தரும்’—சொற்களால் இதைப் பலர் உதிர்க்கிறார்கள்—ஆனால் செயலில் செய்து காட்டத் தவறிவிடுகிறார்கள். ஆனால்...? அதனால் விளையும் கேடு ஒரு மாபெரும் இயக்கத்தின் அடிப்படையையே ஆட்டி அசைக்கிறது என்ற உண்மையை மட்டும் அவர்கள் மறக்காதிருந்தால்...’

இதயம் மறுபடியும் எரிகிறது—ஆனாலும் இன்முகத்தோடுதான் இருக்கிறேன்! சிந்திக்கிறேன்...எண்ணங்களை உதிர்த்துவிட்டு அவற்றுக்குள் ஒளிந்துகொண்டிருக்கும் ஏதோ ஒன்றைத் தேடித் துழாவிப் பார்க்கிறேன்...எட்டாத உயரத்தில் இருந்துகொண்டு இன்முகத்தோடும் புன்சிரிப்போடும் என்னைக் கை நீட்டி அழைக்கும் அந்த மாபெரும் இலட்சியத்தை ஏக்கமும் கலக்கமுமாகப் பார்ப்பதைத் தவிர...

‘அந்தகாரத்தில்...அலைகடலில்...புயல் வீசும்போது...’ என்றெல்லாம் உவமை சொல்வார்கள். ஆனால் மரத்துப் போன உள்ளம் படைத்த மனிதர்கள் மத்தியிலே சிக்கித் தவிக்கும் சீரழிந்த ஜீவன்களின் நிலை இவற்றையெல்லாம் விட இரக்கப்படவேண்டியது என்பதை மறந்தேபோவார்கள்.

இடைவேளை விட்டு எப்போதெப்போதோ என் வாழ்வில் மின்னி மறைந்த மனிதர்கள் சிலரை மலர்களாக்கி, நிகழ்ச்சி நாரில் தொடுத்து மாலையாக்குகிறேன்—நினைவுகளைச் சரிகைகளாக இணைத்து! கட்டுரை தீட்டிவிடலாம் புத்தகங்களைப் படித்து! ஆனால் மனித இதயம் வெளிப்படுத்தும் விதம் விதமான எண்ணங்களைப் படம் பிடிக்கும் இந்தக் கதையெழுதும் வேலைதான்...

தொடர்பேதுமில்லாது துண்டுபட்டுக் கிடக்கும் இந்த முன்னுரையே போதும் கதையைத் தொடங்க. தொடர்ச்சியையும் நானே உருவாக்கிவிடுகிறேன். ஆனால் முடிவு...? படிப்பவர்களே எடுத்துக்கொள்ளுங்கள் அந்தப் பொறுப்பை!

முதல் அத்தியாயம்

இருள், வானத்தில் தன் முழு ஆதிக்கத்தையும் செலுத்த இன்னும் பதினைந்து நாட்கள் பாக்கியிருந்தன. அன்று பௌர்ணமி! எழில், இரவாக அவதாரமெடுத்திருந்தது அப்போது.

கதிரவனுக்குக் கண்ணாடியான நிலா வெள்ளித் தட்டிலே வைக்கப்பட்ட வெண்ணெய்க் கட்டிபோலக் காட்சியளித்தது. பஞ்சுப் பொதியொன்று சிதறிப் பறப்பதைப் போல அலைந்து கொண்டிருந்தன வெண் மேகங்கள். மெருகிழந்து வானத்தில் சிதறிக்கிடந்த தாரகைகள்...! பூஜை அலமாரியிலே ஏற்றி வைக்கப்பட்ட குத்துவிளக்கு, புத்தக அறையில் எரிந்து கொண்டிருக்கும் மின்சார விளக்கை ஏக்கத்தோடு நோக்குவதைப் போல அந்தப் பால் வண்ண நிலவைப் பரிதாபமாகப் பார்த்தன அந்தத் தாரகைகள்!

சேகரன் இதயம் எழுப்பிய எண்ண அலைகளில் எழில் நிலவின் ஒளி விழுந்திருந்தது. வானத்துச் சந்திரனில் வாழும் வாய்ப்புமட்டும் கிடைத்தால்...! உவமைகள் உண்மைகள் ஆகும் போது அவற்றில் உற்சாகமே இருப்பதில்லை! இந்த நினைவும் உதிர்ந்தது அவனுக்கு அப்போது. 'திருமதி சக்குபாய் அம்மாள்!' நீட்டி நெளித்துச் சொல்லிப் பழக்கப்படாத நாக்கு, 'சக்கு' என்று சுருக்கிச் சொல்லுவதால் தன் சோம்பலைக் காட்டிக்கொள்ளும் எப்போதும். எதிர்காலத்தில் அவனோடு இருந்து வாழப்போகிறவள் அவளேதான்! அழைப்பனுப்பி ஆட்களைக் கூட்டி அனுமதி பெற்றுத்தானே ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழமுடிகிறது! அதனாலேதான் கனிந்துங்கூடப் பறிக்காமலேயே விடப்பட்டிருந்தாள் அந்தப் பாவை. கொடிக்கும் கொம்புக்கும் இடையே சட்டமோ விதியோ இருந்து தொல்லை கொடுப்பதே இல்லை! 'இயற்கை' 'இயற்கை' என்று எதற்கெடுத்தாலும் அலறித் துடிக்கும் அறிவாளிகள் நிறைந்த சமுதாயத்துக்கு இன்னும் அது செயற்கையாகவே இருப்பது ஏன்தான் தெரியாமல் போனதோ விளங்கவில்லை!

மெல்ல ஓட்டத் தொடங்கிய துன்ப நினைவுகளை வெட்டி ஒதுக்கிவிட்டு இன்ப நினைவுகளை இழுத்தணைத்தான் சேகரன். காரிய உலகைவிடக் கற்பனை உலகம் கஷ்டமில்லாதது மட்டுமல்ல — இன்பம் நிறைந்ததுங்கூட! மாலையிடக் காத்திருந்த அந்த மங்கையை மன அரங்கில் வரவழைத்தான்! பிறகு......? "சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை!"

"சேகர்!" என்று குரல் கொடுத்துக் கொண்டே உள்ளே நுழைந்தான் சோமு.

உயர்ந்திருந்த பார்வையைத் தாழ்த்தாமல் நின்றிருந்த சேகரனைப் பார்த்த போது அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. பரந்து விரிந்தவானத்துக்கும் அவன் பார்வைக்கும் கயிறு கட்டிப் பிணைத்தது போல...... தன் நண்பனுடைய மனம் வானத்தில் மேய்ந்ததா, மிதந்ததா அல்லது ஆழ்ந்தே போய் விட்டதா என்பதை நிதானிக்க முடியாமல் தத்தளித்தான் சோமு.

"என்ன சேகர்! உள்ளம் உள்ளேயேதான் இருக்கிறதா? அல்லது உலாவப் புறப்பட்டு விட்டதா?" என்று கேலியாகக் கேட்டான்.

கலைந்தன சேகரன் கற்பனைகள். உடனே தலையைத் தாழ்த்தினான். எதிரே சோமு இருப்பதை அவன் பார்த்தபோது...! ஆவலும் வேட்கையுமாகச் சோபன அறைக்குள் காலடி எடுத்துவைக்கும்போது சுற்றிலும் தீப்பிடித்துக்கொண்டது என்ற செய்தி காதில் விழுந்தால்...! ஆனாலும் சமாளித்துக் கொண்டான்.

"கன்னி கழியாமலே காலத்தைக் கழித்துவிடும் பெண்ணைப் போலப் பாழாகிப்போகிறது இரவு, சோமு! எப்படித் தான் இந்த உலகத்துக்கு இதை மறந்து தூங்க மனம் வருகிறதோ!" என்றான் சேகர்.

"சூடு தணிந்தால் சுறுசுறுப்பும் தன்னாலே மறைந்துவிடும், சேகர்!" என்றான் சோமு.

பிறகு என்ன நினைத்துக் கொண்டோ, சோமு அத்தோடு பேச்சை முடிக்காமல் தொடர்ந்து,

"உடல் அலுத்தாலும் உள்ளம் சிலருக்கு அயர்வதற்கு

மறுத்து விடுகிறது இந்த இரவில்'' என்று சோகத்தைச் சொற்களாக்கினு ்.

'கறையேதுமில்லாது களங்கமற்றுக் காணப்படவேண்டிய இந்த நேரத்தில் சோமுவின் மனம் மட்டும் மப்பும் மந்தாரமும் நிறைந்திருப்பானேன்?' என்று சிந்திக்கத் தொடங்கினன் சேகர். அவனுடைய அந்த விசித்திரமான நண்பன்...! அவனுக்குத் தெளிவு காண முடியாத விஷயங்களில் ஒன்ருகவே இன்னும் இருந்தான் அவன். எப்படித்தான் அவர்கள் நட்பு துவளாமல், துண்டுபடாமல் இருக்க முடிகிறது என்பதுதான்...! இருப்புப் பாதைத் தண்டவாளங்களைப் போலவே இருந்தன இருவர் உள்ளங்களும். ஒத்தே போயின — ஆனல் ஒன்று சேர்ந்ததேயில்லை இதுவரையில்! சோமுவையே கூர்ந்து கவனித்தான் சேகர். வேடிக்கையை அனுபவிக்க முடியாமல் வேதனையாக்கி விடுகிருன் — வேதனை வெளிப்படும்போது அதை வேடிக்கையாக்கி விளையாடுகிருன்! இந்தப் பண்பு ஒருவனிடம் எப்படி உருவாக முடிகிறது? வினுக்களே தொடர்ந்து எழுந்தன அவன் மனத்தில். ஆனல் விடைகள் மட்டும் கிடைக்காமலே போயின எதற்கும்!

துடிப்பைத் துண்டித்துவிட நினைத்தான் சேகர்.

"ஆமாம். சோமு! உருக்கி வார்த்த இயற்கை அழகில் இதயத்தைப் பறிகொடுத்துவிட்டதால் உறங்க முடியாத கலைஞர்கள், கவிஞர்கள், காதலர்கள்...!"

"ஏக்கத்தால் தூக்கம் பிடிக்காமல் துடித்துத் துவளும் துர்ப்பாக்கியம் மிகுந்த ஜீவன்கள் கூடத்தான்!" என்று அதை முடித்தான் சோமு.

நிமிர்ந்து வானத்தைப் பார்த்தான் சேகர். நிர்வாணமாகத் தோன்றிய நிலாவை மூடி மறைக்க முயற்சித்தது ஒரு வெண்மேகம். வெள்ளைப் புடவை விதவையின் சின்னம் என்று நினைத்தோ என்னவோ, அதை உதறித் தள்ளிவிட்டுத் தன் உருவை உலகிற்குக் காட்டியது நிலா.

"எப்போதோ உன் இதயத்தில் படிந்த கறைதான் எதிலும் குறையைக் கற்பித்துக் குழப்பத்தை உண்டாக்குகிறது, சோமு! இல்லாவிட்டால் இந்த இன்ப இரவு உனக்குமட்டும்..."

"தேனில் சர்க்கரையைக் கலந்து சாப்பிடத்தான் ஆசைப்படுகிருேம். ஆனல் மருந்தைத் தானே குழைத்துத் தந்து தொலைக்கிருர்கள்!" என்ருன் சோமு.

"எதை முடிக்கும்போதும் 'மங்களம்' என்று எழுதி முடிக்கமட்டும் உனக்கு மனம் வருவதே இல்லை! அது ஏன் என்பதுதான் எனக்கு விளங்கவில்லை!" என்று கேட்டான் சேகர்.

"நட்சத்திரத் துணுக்குகள் சிதறிக் கீழே விழுவதைப் பார்த்திருப்பாய், சேகர்! மேலே

யிருக்கும்வரை அதற்கிருக்கும் ஒளி, கீழே விழுந்தவுடன் அணைந்து மறைந்தே போகிறது. அதே போலத்தான் உயர இருப்பவர்களைத்தான் எழிலும் இன்பமும் மெருகு தீட்டுகின்றன. ஆனால் மண்ணோடு மண்ணாக மக்கிப்போன ஏழைகளுக்கு...? வாழ்க்கை வெறும் வரவு செலவுப் பட்டியல்தான்! அதுவும் கூட்டிக் கழித்து மிச்சம் பார்த்தால் நாசமும் நஷ்டமுந்தான்......!"

மனித உள்ளத்தின் மாபெரும் விசித்திரம், அது குடி புகுந்திருக்கும் உருவத்துக்கேற்றாற் போல அமையாததுதான்! ஆண் உருவத்திலே பெண் உள்ளம் இருக்கும்—பெண் உருவத்திலே பேய் உள்ளம் ஒளிந்திருக்கும்! நண்பன் என்ற நினைவை மறந்து தாய்மை உணர்ச்சிகளை எழுப்பிற்றுச் சேகரன் உள்ளம் அப்போது. பரிதாபத்துக்குரிய தன் நண்பனைப் பரிவும் பச்சாதாபமுமாகப் பார்த்தான்.

"நான் ஏதாவது சொன்னால் கேட்பாயா, சோமு?" என்றான்.

"நீ சொல்லி நான் எதையும் கேட்காமல் இருப்பேனா, சேகர்?" என்று கேள்வியையே பதிலாக்கிக் காட்டினான் சோமு.

"நீ எப்போதும் உன்னைப்பற்றியே நினைக்கிறாய். அதுதான் தவறு. எதிலாவது உன் இதயத்தை இழந்துவிடு. தன்னைப் பற்றிய நினைவை மறப்பது தான் இன்பத்தின் அடிப்படை! இது நான் சொல்வதல்ல—நம் பெரியோர்கள் சொன்னது."

வித்தை

ருசியோடும், பசியோடும் ஆகாரம் சாப்பிட்டால், அது ஆசை என்றும், ஆசை பாசமென்றும், அந்தப் பாசம் முக்திக்குக் குறுக்கே நின்று வழி மறித்துவிடும் என்றும் நான் அக்காலத்திலே எண்ணுவேன். எதிலும் பற்று இல்லாமல் வாழவேண்டும் என்று சங்கற்பம் கொண்டேன். எதிலும் ஆசையில்லாமல் வாழ்வது என்பது வித்தை அல்லவா? அந்த வித்தையை எப்படிப் பழக்கிக்கொள்கிறது? தாமரை இலையில் தண்ணீர் நிற்பது மாதிரி, பட்டும் படாமல், தொட்டும் தொடாமல், ஆசையைக் களைந்து வாழ்ந்து வந்தால் தான் முக்தி கிட்டும் என்று சொல்கிறார்களே, அதை அப்படியே நம்பினேன். தாமரை இலையில் தண்ணீர் அப்படி நிற்க முடியும். மனிதன் தண்ணீரா, அந்த மாதிரி வாழ்க்கை என்ற இலையில் நிற்பதற்கு? காலாலே நடப்பது இயற்கை. கையாலே நடப்பது வித்தை. இயற்கையின் பிரகாரம் நடந்தால், நெடுந்தூரம் நடக்கலாம். வித்தை செய்ய முயன்றால், வியர்வைதான் மிச்சம்.

—வ. ரா.

உருக்கமாகத் தான் இதைச் சொன்னான் சேகர். ஆனால் கேட்டவுடன் உரத்துச்சிரித்து விட்டான் சோமு.

"என் மூளை இதை ஏற்றுக் கொள்ளுகிறது, சேகர்! வயிறு தான் ஒத்துக்கொள்ள மறுக்கிறது. நான் என்னை மறக்க முயற்சித்தாலும் அது ஒன்று தான் குறுக்கே நின்று நினைவு படுத்திக்கொண்டே இருக்கிறது. நம் பெரியவர்களைப் பற்றிப் பேசாதே, என்னிடம். உதவிகளை விட உபதேசங்களைத்தான் அதிகமாகச் செய்யத் தெரிந்தது அவர்களுக்கு. மண்ணாசை பிடித் தலைந்தவர்கள், பெண் பித்துப் பிடித்துத் திரிந்தவர்கள், பொன்னைக் குவிக்கப் பெரும்பாடு பட்டவர்கள், இவர்கள்தானே இதோபதேசம் செய்தார்கள் — முயற்சி முறிந்து விரக்தி அடைந்ததால்! பேரின்பப் பித்துப் பிடித்தவர்கள் சிலரும் இருந்தார்கள் இந்தப் பட்டியலில். பசி பொறுக்காது துடித்தவன் எவனாவது ஏதாவது சொல்லி யிருந்தால் அதைச் சொல் கேட்கிறேன்."

நெடுநேரம் பேசிவிட்டுத் துளிக்கூடக் களைக்காமல் இருந்த சோமுவைப் பார்த்தபோது சேகரனுக்கு ஆச்சரியமாகத் தான் இருந்தது. அழகாகப் பேசினான். ஆனால்...? முக்காட்டை விலக்கிவிட்டு விதவையின் மொட்டைத் தலையைக் காட்டுவதைப்போலத் தோன்றியது அவன் பேச்சு. அதனாலே ஒருவித வெறுப்பும் அருவருப்பும் தோன்றின அவனுக்கு. எதிர்த்து ஏதாவது கேள்வி கேட்கலாம் எனக்கூட நினைத்தான். ஆனால் பெரியவர்களையே அவமதித்தவன் தன்னையும் ஒரு கேலிச் சித்திரமாக்கிவிட்டால்...?

சோமு விடை பெற்றுச் சென்று வெகுநேரம் ஆகிவிட்டது. ஆனால் இழந்த நிம்மதியைப் பெறமட்டும் சேகரனால் முடியவில்லை. வானத்தை நிமிர்ந்து பார்த்தான்.

வெட்டவெளியாகி வெறிச்சென்று காணப்பட்டது வானம். ஏகாந்தமாக எவர் துணையுமில்லாமல் ஏங்கித் தவிக்கும் பெண்

ணைப் போல நிலா தோன்றியது. இற்றுக் கிழிந்து போன நார்ப் பட்டுப் புடவையின் துண்டுகள் மேகங்களாகிப் பறந்தன. பித் தளையின் பொடிகளை யாரோ வானத்தில் தூவிவிட்டதைப் போலத் தோன்றிய தாரகை கள்...! மாற்றுக் குறைந்த மட்ட ரகந்தான் என்பதை அறிவித் தன அவனுக்கு. இதயம் தன் நிலையை ஒரு பெருமூச்சால் வெளிப்படுத்திற்று.

★

அதே நேரத்தில்......!

சக்குவும் மொட்டை மாடியில் நின்று முழுநிலாவையே பார்த் துக்கொண்டிருந்தாள்.

"அக்கா! இன்னும் தூங்கப் போகவில்லையா?"

இந்தக் குரல் கேட்டுத் திரும் பினாள். பக்கத்து வீட்டு ஜன்னல் வழியாக இவளையே பார்த்துக் கொண்டிருந்தான் வாசு. பதில் என்ன சொல்வது என்று புரியா மல் திகைத்தாள் சக்கு.

"ஒன்று கேட்கிறேன், அக்கா! கோபித்துக்கொள்ள மாட்டாயே!" என்றான் வாசு.

"என்ன" என்றாள் மெது வாகச் சக்கு.

"நான் வேண்டுமானால் சீக் கிரம் ஏற்பாடு செய்யும்படி அத் தானிடம் சொல்லட்டுமா, அக்கா?" என்றான் வாசு.

'பரிவா? அல்லது பரிகாசமா?' — இதைத் தெரிந்துகொள்ள அவன் விழிகளைப் பார்த்தாள் சக்கு. அங்கேயும் வேதனைதான்!

சக்குவின் வாழ்வைச் சரி பாதியாக்கிப் பிரித்துக்கொண்ட வர்கள் வாசுவும் சேகரனுந்தான்! வாசு முதற் பகுதி! — சேகரன் பிற்பகுதி! இடைவேளை......? 'திருமணம்' என்ற பெயரில் அது நடக்கவில்லை இன்னும். அதனால்தான் அவளுக்கந்த ஏக்க மும் கலக்கமும்!

வாசு சக்குவோடு ஒரே கூட் டில் வைத்துக் குஞ்சாக்கப்பட்ட முட்டையல்ல; பக்கத்து வீட்டுப் பையன்தான்! ஆனால் 'அக்கா' என்று அவளை அவன் அழைத்த

உருப்படுமா?

அற்புதமான இந்தத் தேசத்தைப் படைத்து விட்டு, அதிலே அழகாகவும், ஆனந்தமாகவும் குடியிருந்து வாழ முடியாமல், அடுத்த உலகத்தையும் முக்தியையும் பற்றிப் பிதற்றிக்கொண்டிருந்தால், இந்த நாடு உருப்படுமா? குடியில்லாத வீடு குட்டிச்சுவராகும் என்பது அனுபவ உண்மை. அதே மாதிரிதான் தேசமும். ஒரு தேசத்தில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்தும், அதில் நிலையற்றவர்கள் போலத் தங்களை எண்ணிக்கொண்டால், அந்தத் தேசம், போற்றிக் காப்பாற்றுபவர்கள் இல்லாமல், பாழாகப் போவதற்கு யாரைப் போய்க் கேட்கவேண்டும்!

—வ ரா.

போது தம்பியில்லாத குறை தன்னாலே மறைந்தது சக்குவுக்கு.

சேகரன் அவளுடைய அத்தை மகன். சக்கு—சேகரன் தலைகளில் அந்த ஆண்டவன் என்ன எழுதி வைத்திருந்தார், அதை எப்போது அவரால் எழுதமுடிந்தது என்பவையெல்லாம் எவருக்குமே விளங்காதவை! ஆனால் இருவரும் பிறந்த போது அவர்கள் பெற்றோர்கள் எதிர்காலத்தை இருவருக்குமே பொது உடைமையாக்கத் திட்டமிட்டுத் தீர்மானமும் செய்துவிட்டனர்! சக்குவுக்கிருந்த குருட்டுத் தாயொருத்தியைத் தவிர மற்றவர்கள் அத்தனை பேரும் எரிந்து சாம்பலாகி எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டன. ஆனால் அந்த 'ஏற்பாடு' மட்டும் காலாவதியாகாத பத்திரமாகவே இருந்து, எல்லோருடைய கண்களையும் உறுத்திக்கொண்டிருந்தது. எல்லோரும் அதைப்பற்றி நினைத்தார்கள் — பேசினார்கள்—அந்த 'வேளை' எப்போது வரும் என்று எதிர்பார்த்தார்கள் — ஆனால் ஒருவராவது அதைக் கவனிக்க மறுத்துவிட்டார்கள்!

'அக்கா' என்று பாசம் நிறைந்து அழைத்தாலும், 'சக்கு' என்று காதல் ததும்பக் கூப்பிட்டாலும், ஒரு பெண் உள்ளத்துக்குள்ளே எந்த ஆணும் நுழைய நேர்ந்தால் அவன் அங்கே சித்திரமாகமட்டும் படிவதில்லை — சிலையாகவும் பதிந்துவிடுகிறான். அதனால் தான் சக்கு தன் வாழ்வென்னும் வானத்தில் சேகரனையும் வாசுவையுமே சூரியனாகவும் சந்திரனாகவும் உலாவவிட்டாள்!

"உனக்கு ஒன்றுமே தெரியவில்லை, அக்கா! நமக்குத் தேவையானவற்றை நாமேதான் தேடிக் கொள்ளவேண்டும்." என்றான் வாசு.

சிறிது நேரம் அவனையே பார்த்தாள் சக்கு. பிறகு, "எனக்குத் தூக்கம் வருகிறது, வாசு" என்று சொல்லிக் கொண்டே உள்ளே போய் விட்டாள்.

குளத்தில் குவிந்து கிடந்த தாமரையையே நெடுநேரம் பார்த்துக்கொண்டு நின்றான் வாசு.

[தொடரும்]

ராஜுவின் கால் சட்டை

ரங்கநாதம் டெலிபோன் ஹவுஸில் தலைமைக் குமாஸ்தா வேலை பார்ப்பவர். காலை ஒன்பது மணி இருக்கும். ஆபீசில் பரபரப்பாக வேலை பார்த்துக்கொண்டிருந்தார். சர்வசாதாரணமாக டெலிபோன் உபயோகிக்கப்படும் பம்பாய் நகரத்தில் அவர் ஆபீஸ் ரொம்ப சுறுசுறுப்பாக வேலைசெய்துகொண்டிருந்தது. அப்போது ரங்கநாதத்தை அவர் மனைவி அம்புஜம் போனில் கூப்பிட்டாள். அவசரத்தோடு அவசரமாகப் போனைக் கையிலெடுத்துக்கொண்டு "என்ன?" என்று விசாரித்தார்.

"நம்ம ராஜு இன்னும் பள்ளிக்கூடம் போகவில்லை."

"ஏன்? மணி ஒன்பது ஆகிவிட்டதே. சீக்கிரம் அனுப்பி வை" என்று ரங்கநாதம் சற்று கோபமாகச் சொன்னார்.

ராஜு ரங்கநாதத்திற்கு ஒரே பையன். ஐந்து வயது ஆகிறது. மிகவும் செல்லமாக வளர்ந்தவன். ஆனால் அவன் மற்ற செல்லப் பிள்ளைகளைப் போலப் பள்ளிக்கூடம் செல்வதற்கு ஒரு நாளும் அடம் பிடித்ததேயில்லை. இன்று இன்னும் போகாம லிருப்பது ரங்கநாதத்திற்குச் சங்கடமாயிருந்தது. மீண்டும் என்ன காரணம் என்று அம்புஜத்தை விசாரித்தார். அம்புஜம் அழுது கொண்டே பதிலளித்தாள்.

"இன்று எப்போதும் போல ராஜுவைக் குளிப்பாட்டி விட்டு மேல் சட்டையும், அரை நிஜாரும் போட்டேன். அது வரை நன்றாகத்தான் இருந்தான். கால் சட்டையை மாட்டிய பிறகு அவனால் நேராகவே நிற்க முடியவில்லை. கை கால்களைப் பிடித்து விட்டேன். பிறகும் அவனால் நிற்கவே முடியவில்லை. தொப்பென்று படுக்கையில் விழுந்து விடுகிறான். என்ன சங்கடமோ ஏதோ! நீங்கள் சீக்கிரம் வாருங்கள். எனக்குப் பயமாயிருக்கிறது" என்று அம்புஜம் அடித்தொனியில் பேசினாள்.



ரங்கநாதம் மானேஜரிடம் சொல்லிவிட்டு அவசரமாகப் பஸ் ஏறி வீட்டுக்கு ஓடிவந்தார். வீட்டில் ராஜு படுக்கையில் உட்கார்ந்திருந்தான். ரங்கநாதம் அவனைப் பன்முறை நேராக நிற்கவைத்துப் பார்த்தார். முடியவில்லை. அவருக்கும் அழுகை வந்துவிட்டது.

"ஒரே பையன். செல்லமாக வளர்த்தோம். திடீரென்று இப்படிக் கால் விளங்காமலா போகவேண்டும்?" என்று கண்ணீர் விட்டாள் அம்புஜம்.

"அம்புஜம் எனக்கு ஒன்றும் புரியவில்லை" என்று ரங்கநாதம் கையைப் பிசைந்துகொண்டார்.

"டாக்டருக்குப் போன் பண்ணுங்கள். அவர் வந்தாவது பார்க்கட்டும்."

இவ்வளவு கொள்ளைக்கும் மத்தியில் ராஜு உம்மென்று உட்கார்ந்திருந்தான். அப்பா அம்மா இருவரும் அழுவதைப் பார்க்கும்போது அவனுக்கு ஒரே சிரிப்பாயிருந்தது. சிரித்துக் கொண்டே கட்டிலில் படுத்திருந்தான்.

டாக்டர் வந்தார். ராஜுவின் கால்களை நன்றாகப் பரிசோதித்துப் பார்த்தார். சிறு சுத்தியல் ஒன்றால் காலில் சில இடங்களைத் தட்டிப் பார்த்தர். "கணீர் கணீர்" என்று சப்தம் நன்றாகக் கேட்டது. ஆனால் எழுந்து நிற்க வைத்தால் ராஜு தொப்பென்று விழுந்து விடுகிறான். அவருக்கும் புரியவில்லை. அவர் மூளையைக் குடைந்து யோசனை பண்ணிக்கொண்டிருந்தார்.

டாக்டர் விழிப்பதைப் பார்த்ததும் அம்புஜமும் ரங்கநாதமும் மிகவும் கலங்கினார்கள்.

அப்போது அடுத்த தெருவிலிருந்து ராஜுவின் பள்ளித் தோழன் மணி ராஜுவை பள்ளிக்கூடம் அழைத்துப் போவதற்காகச் சாக்லெட்டும் கையுமாக வந்து நின்றான். ராஜு படுக்கை

யில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் அவனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. அவன் கால்சட்டை போட்டிருப்பதைப் பார்த்ததும் இன்னும் பலமாகச் சிரித்தான்.

"என்னடா ராஜு, கால் சட்டையை இப்படிப் போட்டிருக்கிறாய்?" என்று சொல்லிவிட்டுக் கையிலிருந்த சாக்லெட்டை 'உர்ப்' என்று சூப்பினான்.

பிறகுதான் டாக்டருக்கு விஷயம் புரிந்தது. அவரும் சிரித்துவிட்டார். அம்புஜத்திற்கும் ரங்கநாதத்திற்கும் சொன்னார். அவர்களும் அழுகையோடு அழுகையாகச் சிரித்தார்கள்.

'ராஜு ஏன் நேராக நிற்க முடியவில்லை?' என்பதற்குக் காரணம் தெரிந்துவிட்டது. பிறகு சிரிக்கமாட்டார்களா?

காரணம் என்ன? எல்லாம் அந்தக் கால்சட்டைதான். ராஜு தன் இரண்டு கால்களையும் கால்சட்டையின் ஒரு கால் வழியாக விட்டிருந்தான். அம்புஜம் அவசரத்தில் அதைக் கவனிக்கவில்லை. ரங்கநாதமும் பதட்டத்தில் அதைக் கண்டுகொள்ளவில்லை. டாக்டரும் வழக்கம்போலக் கவனிக்காமல் விட்டுவிட்டார். மணி கண்டுபிடித்து விட்டான். அவ்வளவுதான்.

செல்லப் பிள்ளை என்பதற்காக அம்புஜந்தான் ராஜுவுக்கு எல்லாம் செய்து வந்தாள். அதனால் அவனுக்கு ஒன்றுமே தெரியவில்லை. மணி கெட்டிக்காரப் பையன். பல் தேய்ப்பது, சட்டை போட்டுக் கொள்வது எல்லாம் அவன்தான். ஆகவே ராஜுவைக் கேலி செய்தான். அது சரி, நீ எப்படி?

செய்து பாருங்கள்!

ஒரு தீப்பெட்டியின் மேல் உறையையும் எட்டு அல்லது பத்து தீக்குச்சிகளையும் எடுத்துக்கொள்ளுங்கள். படத்தில் காட்டியதுபோல் ஒரு மேஜையின் மேல் தீக்குச்சிகளை நெருக்கமான வரிசையாக வையுங்கள்.

உங்கள் நண்பனை அழைத்து, "இந்தத் தீக்குச்சிகளை வரிசை குலையாமல் அந்தரத்தில் தூக்க வேண்டும். குச்சிகளைக் கையால் தொடக்கூடாது. அவைகளுக்கு அடியில் 'எதையும் செருகக்கூடாது. உன்னால் முடியுமா?" என்று கேளுங்கள்.

உங்கள் நண்பனால் செய்ய முடியாமற் போனால் நீங்கள் செய்து காட்டலாம். மேஜையின் மேலுள்ள தீக்குச்சிகளின் மேல் தீப்பெட்டியின் மேலுறையை வைத்து வாயின் மூலமாகக் காற்றை உள்ளே இழுங்கள். குச்சிகள் பெட்டியில் ஒட்டிக்கொள்ளும். அப்படியே உங்கள் முகத்தை நண்பனின் பக்கம் திருப்புங்கள்.

தீப்பெட்டியில் குச்சிகள் ஒட்டிக்கொண்டிருக்கும் பொழுது உள்ளே இழுத்த காற்றை வெளியே விட்டுவிடாதீர்கள். அப்பொழுதுதான் குச்சிகள் கீழே விழாமலிருக்கும்.

★

தகப்பனைக் கொல்லும் மகன்!

தென் துருவத்திற்கு அருகில் ஒரு சிறிய தீவு இருக்கிறது. அத்தீவில் நாகரிகமற்ற மக்கள் வாழ்கின்றனர். அங்கு நிலவளம் குறைவு. அங்குள்ள மக்களுக்குப் போதுமான உணவுப் பொருட்கள் அந்தத் தீவில் விளைவதில்லை. மேலும் அங்குள்ள மக்களுக்கு நோய் நொடி வருவதும் அபூர்வமாதலால், அவர்கள் சீக்கிரமாகச் சாவதில்லை. அதனால் உணவுக் கஷ்டம் அதிகரித்து, புதிய சட்டம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அதன்படி தகப்பனுக்கு எழுபது வயது ஆகும்பொழுது மகன் அவரைக் கொன்றுவிடுவான்! உணவு நெருக்கடியைக் குறைக்கவே இந்த ஏற்பாடு!

★

நல்ல காரணம்!

ஆசிரியர்:—சூரியன் ஏன் அஸ்தமிக்கிறது?
பையன்:—ராத்திரியாப் போச்சு; அதனால் அஸ்தமிக்கிறது.

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) REGD. BY CENTRAL DRUGS LABORATORY OF GOVT. OF INDIA. UNDER NO. CDL / 698

எக்காரணத்தினுலும் எத்தனை மாதமானுலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். விலை ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)
Government Registered No. 266

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாகக் கருவைத் தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்ப்ரவரியாக கருவைத் தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: **SEENU & CO., P. B. 1638, (6) Madras-1**

பிராஞ்சு : *134, SERANGOON ROAD* சிங்கப்பூர்

சிலோன் ஏஜண்ட்:

NEW COLOMBO MEDICAL STORES, 82, Main st., கொழும்பு-1

போன் : 2549 தந்தி : "IMAGE"

எங்களிடம்

- ★ ஜன்னல் கண்ணுடிகள்
- ★ பலநிறக் கண்ணுடிகள்
- ★ முகம்பார்க்கும் கண்ணுடிகள்
- ★ மூன்ருேட்டு பலகைகள்
- ★ படங்கள், சட்டங்கள்
- ★ மேசைக் கண்ணுடிகள்

முதலியன கிடைக்கின்றன.

R. ETHIRAJIAH & SONS

103, DEVARAJA MUDALI STREET, P. T., MADRAS—3

கணவனின் காதலி

அட்டைப்படக் கதை

எழுதியவர் : **ராஜேஸ்வரி**

தடதடவென்று கதவைத் தட்டும் சத்தம் கேட்டு அவள் வெளியே வந்தாள்.

வாசலில் காத்திருந்த தபாற்காரன் ஒருகடிதத்தை அவளிடம் கொடுத்துவிட்டுப்போனான். கடிதம் தாங்கிய அந்தக் கரங்கள் சிலிர்த்தன. படிப்பதற்காக விரிக்கப்பட்ட கடிதத்தில் இரண்டொரு கண்ணீர்த்துளிகள் விழுந்தன. இடையிடையே நீண்ட பெருமூச்சு. ஏக்கத்தோடு இரண்டாம் முறையாகப் பிரேமா கடிதத்தை வாசிக்க ஆரம்பித்தாள். துக்கம் சிறிது சிறிதாகக் குறைந்து கோபம் கொந்தளிக்க ஆரம்பித்தது.

‘இப்படியும் இருக்குமா?’ என்று எண்ணியவாறு படிக்க ஆரம்பித்தாள்.

“அன்புள்ள பிரேமாவுக்கு,

நீ பிறந்தகம் போனாலும் போனாய்! எங்களையெல்லாம் அடியோடு மறந்து விட்டாய்! இந்த ஆறு மாதமாக அங்கே என்னடி செய்து கொண்டிருக்கிறாய்? போனது போகட்டும்! நீ என் பிரியமுள்ள தோழியாச்சே என்பதற்காக இதை உன்னிடம் சொல்கிறேன்.

உன் கணவர் இருக்கிறாரே, தங்கமானவர் என்றுதான் நாங்கள் நினைத்திருந்தோம். ஆனால் என்னமோ அம்மா, இப்படியெல்லாம் ஆவார் என்று நான் எண்ணவே இல்லை.

இந்த அநியாயத்தைக் கேள். நீ இருந்து குடித்தனம் நடத்திய வீட்டிலே இப்பொழுது இன்னொருத்தி வந்திருக்கிறாள். அவள் அப்படி ஒன்றும் குழந்தையுமல்ல, கிழவியுமல்ல; சொல்லப்போனால் உன்னைக் காட்டிலும் அழகாகத்தான் இருக்கிறாள். தினசரி சாயந்திரம் ஆனதும் உன் கணவரும் அவளும் கைகோர்த்துக்கொண்டு பீச்சுக்குப் போகிறார்கள்; வருகிறார்கள்; ஊரெல்லாம் சிரிக்கிறது!

வாழ்க்கைப்பட்ட உன்னால் அவரை வசப்படுத்த முடியாதென்றால், வாழாவெட்டியாக அங்கேயே இருந்து விடு! இல்லையென்றால் உடனே புறப்பட்டு வா!

உன் தோழி

ரமா!”

கடிதத்தைப் படித்து முடித்தாள் பிரேமா. அடுத்த கணம், கையிலிருந்த கடிதம் சுக்கு நூறாகக் கிழிந்தது. பொங்கி வரும் அழுகையை அடக்க முடியாமல் தொப்பென்று படுக்கையில் சாய்ந்தாள். அவள் உள்ளத்தில் ஓராயிரம் எண்ணங்கள் நிழலாடத் தொடங்கின.

ராவ் சாஹிப் ரங்கநாதனின் இரண்டாவது பெண் பிரேமா. செல்வத்திலேயே பிறந்து வளர்ந்த அவளது உள்ளம் செல்வத் திமிரால் நிறைந்திருந்தது. அவளது கணவன் ராதாகிருஷ்ணன் சாதாரண நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவன்; பொறுமைசாலி.



புது வாழ்க்கை ஆரம்பித்த சில நாட்களுக்குள்ளேயே பிரேமாவுக்கும், ராதாகிருஷ்ணனுக்குமிடையே வேற்றுமை தோன்ற ஆரம்பித்தது. பணம், பணம் என்று பணம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருந்த பிரேமா, கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை மறந்தாள்—அவனது அன்பை அலட்சியம் செய்தாள். ராதாகிருஷ்ணனும் பிரேமாவின் பேராசை உள்ளத்தைத் திருத்திவிட எவ்வளவோ முயற்சிகள் செய்து பார்த்தான். ஆனால், அந்தப் பேயுள்ளம் திருந்துவதாக இல்லை.

ஒரு நாள் ஆபீஸிலிருந்து மிகுந்த அலுப்போடு வீடு வந்தான் ராதாகிருஷ்ணன்! வீட்டிலே பிரேமா இல்லை. அவள் தோட்டத்திலே தன் தோழி ஒருத்தியுடன் வம்பளந்து கொண்டிருந்தாள். தனது சோர்வையும் அலுப்பையும் கூட மறந்துவிட்டு, 'பிரேமா' என்று ஆர்வத்தோடு கூப்பிட்டான்! அவள் மிகுந்த அலட்சியத்தோடு எழுந்து வந்தாள்.

“பிரேமா, இன்றைக்குக் காப்பி இல்லையா என்ன?”

இப்படிக் கேட்டதுதான் தாமதம்! பிரேமா மடமடவென்று வார்த்தைகளைக் கொட்ட ஆரம்பித்தாள்.

“ஆமாம். காப்பி போடாததுதான் குறைச்சல். பால்காரன் தினசரி மூன்று தடவை பாக்கிக்காக வந்துவிட்டுப் போகிறான். காப்பித்தூள் டப்பா இரண்டு நாளாய்க் காலியாய்க் கிடக்கிறது. காப்பி எங்கேயிருந்து வரும்?”

“பிரேமா, ஏன் இப்படியெல்லாம் பேசுகிறாய்? காப்பி இல்லையென்றால் குடிக்காமல் இருந்துவிடுவோமே!”

“ஆமாம், நீங்கள் இருந்துவிடுவீர்கள்! என்னால் இருக்க முடியாது.”

“பிரேமா!”

“போதும். இந்த வீட்டிற்கு வந்த பிறகு ஒரு நாளாவது சந்தோஷமா இருக்க முடியவில்லை. நாலு சேலைகள் நல்லதாக் கிடையாது. வெளியே போவதற்கே வெட்கமாயிருக்கு. ஹூம்... எங்க வீட்டிலே எப்படியெல்

லாமோ இருந்துவிட்டுக் கடைசியில்..." என்று அழ ஆரம்பித்துவிட்டாள்.

இம்மாதிரிச் சமயங்களில் எல்லாம அவன் எப்பொழுதுமே தாழ்ந்து போய்விடுவது வழக்கம். அன்றைக்கும் அப்படித்தான் பேசாமல் இருந்தான். ஆனல் அவள் விடுவதாயில்லே. அழுகையோடு அழுகையாகத் தன் ஆத்திரத்தையும் கொட்டிவிட்டாள். அவனது பொறுமை ஓரளவு எல்லே கடந்தது.

"பிரேமா, ஒரு கணவனின் காதலேவிடப் பணத்தின்மீது உனக்கு அன்பு அதிகமாயிருந்தால், என்னேக் கல்யாணம் செய்துகொண்டிருக்க வேண்டாமே" என்ருன்.

"ஏன் உங்களேக் காதலிக்கும் எவளேயாவது கட்டிக்கொள்வது தானே! இனிமேல் நான் இந்த வீட்டில் ஒரு நிமிஷங்கூட இருக்கமாட்டேன்!" என்று படபடவென்று பேசினுள். ராதாகிருஷ்ணன் ஒன்றும் பேசாமல் வெளியே போய்விட்டான்.

அன்றிரவு அவன் திரும்பி வரும்போது பிரேமா வீட்டில் இல்லே.

திடீரென்று வந்து சேர்ந்த தன் மகளேக் கண்டுதிடுக்கிட்டுப்போனுள் பிரேமாவின் தாயார். அதன் காரணத்தை அறிய எவ்வளவோ முயற்சிகள் செய்தாள். ஒன்றும் பயன் படவில்லே. தன் பெண் கணவனுடன் வாழாமல் பிறந்தகத்திற்கு வந்துவிட்டதை எண்ணிப் பொருமியது தாயுள்ளம். ரங்கநாதனே அதையெல்லாம் ஒன்றும் கவனிக்கவில்லே. 'நமக்கோ இவ்வளவு சொத்து இருக்கிறது. இதை வைத்துக் கொண்டு ஆள்வதற்கு யார் இருக்கிருர்கள்? அவள் இருக்கிற மட்டும் இருக்கட்டுமே' என்ற ரீதியில் இருந்துவந்தார். இதற்கிடையில், ராதாகிருஷ்ணனிடமிருந்து பிரேமாவைப் புறப்பட்டு வரும்படி எத்தனேயோ கடிதங்கள் வந்தன. பிரேமா அதை ஒன்றையும் லட்சியம் செய்யவில்லே. பணச் செருக்கில் மமதைகொண்ட அவள் தனது கணவனின் அன்பையெல்லாம் நிராகரித்தாள். ஆனல்...? வாழாவெட்டியாகப் போவது அவனல்லவே. இதை எடுத்துச் சொல்லப் பிரேமாவுக்கு ஒருவரும் இல்லே. பிரேமா பிரேமாவாகவே இருந்தாள். ஆனல், இன்று...? அந்தக் கடிதம்...



★

சிந்தனேயில் மூழ்கியிருந்த பிரேமா சட்டென்று எழுந்தாள். மாடிப் படியே அதிர்ந்து

கீழே விழுந்து விடும்படி ஓடி வந்தாள்.

"அம்மா, நான் நாளைக் காலையில் ஊருக்குப் போகிறேன். பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிடு" என்று தாயிடம்கூறிவிட்டு மறுபடியும் மாடிக்குச் சென்றுவிட்டாள். தன் பெண்ணின் போக்கு அவளுக்கு விசித்திரமாயிருந்தது. ஆனாலும், தன் பெண் எப்படியோ மனம் திரும்பிக் கணவன் வீடு போக ஒப்புக்கொண்டாளே என்ற சந்தோஷத்தில் பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனே செய்ய ஆரம்பித்தாள்.

★

மாலையில் வீட்டிற்குத் திரும்பி வந்த ராதாகிருஷ்ணன் வீடு திறந்திருப்பதைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போய்விட்டான். உள்ளே பிரேமாவின் தலையைக் கண்டதும் ஆச்சரியத்தோடு, "பிரேமா, நீயா! ஊரிலிருந்து எப்போது வந்தாய்?" என்றான். பிரேமா எப்போதும் போல் பதிலே பேசவில்லை. ராதாகிருஷ்ணன் விடவில்லை. மறுபடியும் கேட்டான். அவளோ வேண்டா வெறுப்போடு, "இப்போதுதான் வந்தேன்" என்றாள். ராதாகிருஷ்ணன் சற்றுநேரம் வீட்டிலிருந்தான். அவளோ பேசுவதாகத் தெரியவில்லை. பிறகு ஏதோ வேலையிருப்பதாகச் சொல்லிவிட்டு வெளியே சென்று விட்டான்.

பிரேமா வீட்டை நன்கு கவனித்தாள். அவள் வைத்துப் போன சாமான்களெல்லாம் வைத்த வைத்த இடத்திலேயே இருந்தன. தரையெல்லாம் தூசி படிந்து ஒரே குப்பையாகக் கிடந்தது. வீட்டிலே யாரும் பெண் பிள்ளையின் நடமாட்டம் இருப்பதாகவே தெரியவில்லை! ஆனால் 'யாரோ' ஒருத்தி வந்து போகிறாள் என்பதற்கு ஆதாரம் இல்லாமலும் போகவில்லை. கூடத்தின் நடுவே அழகான மேஜை ஒன்று போடப்பட்டிருந்தது. அதன் மீது பெரிய கண்ணாடி! கண்ணாடிக்கு எதிரில் வாசனைப் பௌடர், ஹேர் ஆயில், ஸ்னோ, ரிப்பன்! இவை போதாதா? பிரேமா இவற்றையெல்லாம் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டே உள்ளே திரும்பினாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் வாசற் கதவு தட்டப்படும் சப்தமும், அத்துடன் கூடவே, "மிஸ்டர் ராதாகிருஷ்ணன் இருக்கிறாரா?" என்ற இனிமையான குரலும் கேட்டுக் கதவைத் திறந்தவள் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டாள். பிரேமா நல்ல அழகிதான். ஆனால், பிரேமாவைக் காட்டிலும் அழகாக இருந்தாள் அந்தப் பெண். "மிஸ்டர் ராதாகிருஷ்ணன் இருக்கிறாரா?" என்று மறுபடியும் கேட்டபோதுதான் அவள் சுய உணர்வு அடைந்தாள். "அவர் வீட்டில் இல்லை. நீங்கள்

யார்?" என்று கடுகடுப்போடு கேட்டாள்.

"என் பெயர் மோஹினி. நான் சரஸ்வதி வித்யாலயத்தில் சேர்ந்திருக்கிறேன். ராதா கிருஷ்ணன் வந்தால் ஐந்து மணிக்கு என் வீட்டிற்கு அவசியம் வரச்சொல்லுங்கள். என்ன, சொல்கிறீர்களா? இல்லாவிடில் நானே ஆறு மணிக்கு இங்குவந்துவிடுவேன்" என்று கூறிக்கொண்டே டாக்ஸியில் ஏறிப் போய்விட்டாள்.

★

வெளியே போயிருந்த ராதா கிருஷ்ணன் வீடு திரும்பினன். அதுவரையில் அடக்கிவைத்திருந்த கோபத்தையெல்லாம் அவன்மேல் கொட்ட ஆரம்பித்தாள். சினத்தின் மிகுதியால் வார்த்தைகள் நெருப்பாக வெளிவந்தன.

"பிரேமா" அன்போடு அவன் அழைத்தான்.

"என், என்ன?" அலட்சியத்தை அள்ளி வீசினுள்.

"பிரேமா, இன்னும் கோபமா? உன்னுடைய பழைய குணம் இன்னும் மாறவில்லையா? வலிய வலிய வந்து பேசுகிருனே என்பதற்காக என்னை வாட்டுகிருயா?"

"போதும். முதலில் நான் கேட்பதற்குப் பதில் சொல்லுங்கள்."

"நன்ருகக் கேள்! ஆனந்தமாகச் சொல்லுகிறேன்!"

"இந்த நாடகம் எத்தனை நாட்களாக நடக்கிறது?"

"எந்த நாடகம்?" அவன் குரலில் திகைப்பும் மலைப்பும் நிறைந்திருந்தன.

"எந்த நாடகமா? அதோ பாருங்கள்" என்று ஆத்திரத்தோடு கூறியவாறே மேஜையைச் சுட்டிக் காட்டினுள் பிரேமா.

"பூ! இதைத்தான் இத்தனை ஆத்திரமாகக் கேட்டாயா? நல்லவேளை நான் என்னமோ ஏதோ என்று பயந்துவிட்டேன். இது மூன்று மாதமாக நடக்கிறது." என்ருன் அவன்.

"என்ன, மூன்று மாதங்களாகவா? சரி, சரி எனக்கு எல்லாம் தெரியும்."

"என்னைத் தெரிந்து கொண்டாயா பிரேமா?"

"எல்லாம் உங்கள் வண்டவாளத்தைத்தான்!" என்று சாயங்காலம் நடந்தவற்றைக் கூறினுள்.

"என்ன? மோஹினியா? ஐந்து மணிக்கா வரசசொல்லியிருந்தாள்! மணி ஐந்தேகால் ஆகிறதே." என்று கூறிக்கொண்டே அவசர அவசரமாக வெளியே சென்றுன் ராதாகிருஷ்ணன். அன்று பூராவும் பிரேமா அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகவே இருந்தாள்.

என்னதான் பணம், பணம் என்று பணத்தையே பெரிதாகக் கருதிக் கொண்டிருந்தாலும் இன்னொரு பெண் தன் வாழ்வில் குறுக்கிடுவதை எந்தப் பெண்ணும் சகித்துக் கொண்டிருக்க மாட்டாள்! பிரேமாவின் 'பெண்மை' உள்ளம் அப்போது தான் விரிய ஆரம்பித்தது!

அதிலே அவளது அகங்காரம் மமதை, திமிர் எல்லாம் கரைந்து போயின. எதையோ ஒன்றைப் பறிகொடுத்தவள் போல அவள் உள்ளம் ஏங்கியது!



மறுநாள் விடிந்தது.

முதல்நாள் இரவு சாப்பிடாமல் படுத்த அசதி இருந்தபோதிலும்கூட எழுந்து வீட்டு வேலைகளை, மெதுவாகக் கவனிக்க ஆரம்பித்தாள்.

பத்து மணி இருக்கும். ராதாகிருஷ்ணன் ஆபீசுக்குக் கிளம்பிவிட்டான். அவன் போன சிறிது நேரத்திற்கெல்லாம் வாசற் கதவைத் தட்டும் சத்தம் கேட்டுக் கதவைத் திறந்தாள் பிரேமா. நேற்றுவந்த பெண்—அவள்தான் அவளுடைய கணவனின் காதலி மோகினி—நின்று கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் பிரேமாவின் கோபம் எல்லை மீறிவிட்டது. பரபரவென்று அவள் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு, கூடத்திற்கு வந்து அவளைத் தன் வாயில் வந்தபடி திட்டினாள். மோஹினி மிகவும் பயந்துவிட்டாள்.

"என்னை ஏன் திட்டுகிறாய்?" என்று அவள் சாவதானமாகக் கேட்டாள.

"ஏன் திட்டுகிறேனா? மூதேவி, ஒன்றுமறியாத என் கணவரை மயக்கி, அவரை ஆட்டி வைக்கிறாயே அதற்காக உனக்கு வாழ்த்துப் பாடச் சொல்லுகிறாயா?"

"ஓ—அவர் உன்னுடைய கணவரா? நேற்றுக்கூட என்னிடம் சொல்லவில்லையே நீ!"

"ஒழுக்கம் கெட்டவளிடம் இதையெல்லாம் நான் சொல்ல வேண்டுமா?" அவள் சீறினாள்.

"கணவனை வைத்து வாழத் தெரியாத நீ, என்மேல் சீறுவதில் பிரயோஜனமில்லை. உன் கணவன்மேல் உனக்கு அவ்வளவு அன்பிருந்தால் அவரிடம் உன் சாகசத்தைக் காட்டி, அவர் என்னை நாடி வராமல் செய்துவிடேன்."

இந்த வார்த்தைகள் பிரேமாவின் உள்ளத்தில் நறுக்கென்று தைத்தன. கணவனின் அன்பை அலட்சியம் செய்தது எவ்வளவு விபரீதமாகப் போய்விட்டதென்பதை அவள் உணர்ந்ததும் அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது. கடைசியாக மோஹினி சொன்னாள்:

"நீ ஒன்றும் என்னைத் திட்ட வேண்டாம். நான் இப்பொழுதே சென்றுவிடுகிறேன்."

"அது மட்டுமல்ல, இனி இந்தப் பக்கமே வரக்கூடாது, ஆமாம்."

"சரி"யென்று தலையை ஆட்டிக்கொண்டே மோஹினி வெளியே செல்லக் கிளம்பினாள். அப்போது அவளது தலைப் பின்னல் பிரேமாவின் கண்களில் பட்டது.

"கொஞ்சம் நில்!" என்றாள் அதிகாரத் தோரணையோடு.

"ஏன்? என்ன?"

"உன் தலையிலிருக்கும் ரிப்பன், நேற்று என் வீட்டு மேஜையில் கிடந்தது. அது எப்படி உன் தலைக்கு வந்தது?"

"அதுவா, உன் கணவன் நேற்று எனக்குக் கொடுத்த அன்புப் பரிசு அது" என்றாள்.

பிரேமாவுக்கு ஆத்திரம் பொறுக்க முடியவில்லை. கோபத்தோடு சட்டென்று அவள் தலைப் பின்னலைப் பிடித்து இழுத்து ரிப்பனை எடுத்தாள். என்ன ஆச்சரியம்! தலைப் பின்னல் அவள் கையோடு வந்துவிட்டது. இப்போது மோஹினி இருந்த இடத்தில் குறும்புத் தனம் தாண்டவமாடக் கட்டிய சேலையுடன் காதில் லோலக்கு சகிதம் ராதாகிருஷ்ணன் நின்றுகொண்டிருந்தான். பிரேமாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

"இது என்ன வேஷம்?" அவள் தடுமாறிக்கொண்டே கேட்டாள். ராதாகிருஷ்ணன் சிரித்துக்கொண்டே சொன்னான்:



"நீதான் பணம், பணம் என்று என் அன்பைக் கூட லட்சியம் செய்யாமல் ஊருக்குப் போய் விட்டாய்! கடைசியில் உன்னைத் திருப்திப்படுத்துவதற்காகவே நாடகக் கம்பெனியில் சேர்ந்தேன். அங்கே எனக்குப் பெண் வேஷம் கொடுத்தார்கள். பணத்திற்குப் பணமும் கிடைத்தது, இப்போது உன் அன்பும் கிடைத்துவிட்டது."

"அத்தான், என்னை மன்னித்து விடுங்கள்! இனிமேல் எனக்குப் பணம் வேண்டாம். உங்கள் அன்பு இருந்தால் போதும்" என்று அவன் கால்களைப் பிடித்துக்கொண்டு கதறினாள்.

அவளை அப்படியே வாரியெடுத்து அணைத்துக் கொண்டான் ராதாகிருஷ்ணன்.

இப்போது அவர்கள் வீட்டில் 'மோஹினி'யின் போட்டோ ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கும்போதெல்லாம் அவள் உள்ளம் இன்பவெள்ளத்தில் திளைத்து மகிழ்ந்து நிற்கும். நாள் தவறாமல் அந்தப் படத்திற்கு ரோஜா மாலை வாங்கி அணிவதற்கு அவள் மறப்பதே இல்லை. தன்னை நல்வழிக்குக் கொண்டுவந்த தன் 'கணவனின் காதலி'யை அவளால் எப்படி மறக்கமுடியும்?

வருவீர் அத்தான்!

புதுமைவாணன்

"அத்தானே என்னுயிரில் நிறைந்து போன
ஆர்வத்தை எழுதுகிறேன்: நீங்கள் தந்த
கொத்தான முத்தத்தின் இனிமை தன்னைக்
கொஞ்சமுமே என்நெஞ்சம் மறப்ப தில்லை!
தித்திக்கும் செந்தேனும் தீம் பலாவும்
சேர்ந்துவிட்ட பின்சுவையோ குன்றிப் போகும்?
எத்தனைநாள் தனிமையில்நான் இருப்பேன்? கண்கள்
என்றேனும் பார்வையினைப் பிரிவ துண்டோ?

"தோட்டத்தைக் கண்டதொரு கருங்குயில் தான்
தூங்கியதைக் கண்டீரோ? முகிலைக் கண்டும்
ஆட்டத்து மயில், சும்மா இருப்ப துண்டோ?
அணிதமிழும் இனிமையினைப் பிரியுமோ தான்?
கூட்டுக்குள் கிடந்திடவோ கிளி விரும்பும்?
குளிர்சோலை தென்றலினைப் பிரிவ துண்டோ?
பாட்டெழுதத் தடைசெய்தால் கவி தன்மூச்சுப்
பதைக்காமல் இருந்திடுமோ? முழு நிலவின்

"உதயத்தைக் கண்டகடல் பொங்கி டாமல்
ஒருநொடியும் அமைதிகொளல் உண்டோ? என்றன்
இதயத்தில் உம்காதல் புகுந்த பின்னர்
என்னுணர்வு சும்மாதான் இருப்ப துண்டோ?
சதிசெய்யும் என்பெற்றோர் என்னைப் பூட்டித்
தடைசெய்து வீட்டினிலே கிடத்தி விட்டார்!
கொதிக்கின்றேன்; பிரிவாலே வாடு கின்றேன்
கொத்தடிமை போல்இங்கு நொந்து போனேன்!

"வீடெனக்குச் சிறைச்சாலை; 'சன்னல் தன்னில்'
விழிநீட்ட எனக்குரிமை கொடுப்ப தில்லை;
மூடாத கதவருகில் நான்சென்றால், என்
முகங்கருகக் கோபத்தீ உமிழ் கின்றார்கள்!

தேடிவரும் நதிதன்னைக் கடல் அணைத்தால்
தீதென்று இயற்கையுமே மறுப்ப துண்டோ?
ஓடிவர வேண்டுகிறேன் அத்தான், என்றன்
உயிர்பிரியு முன்கடிதம் வரைந்து விட்டேன்.

"இன்னொன்று: நம்காதல் அறிந்து கொண்ட
என் தந்தை உறுமுகிறார்; ஊரி லுள்ள
தன், தங்கை மகனிடம்என் கழுத்தை நீட்டித்
தரவேண்டும் என்பாரோ! அதற்காகத் தான்
என்னென்ன ஆர்ப்பாட்டம்! தாலி செய்ய
எத்தனைபேர் ஓடுகிறார்! பந்த லுக்குத்
தென்னை யிளங் கமுகெல்லாந் தேடுகின்றார்!
திருமணத்தின் இதழ் எல்லாந் தீட்டுகின்றார்!

"எப்படிநான் பொறுத்திடுவேன் அத்தான்? தங்கள்
இருகையும் பழகியஎன் மேனி இன்று
குப்புறவே வெறுந்தரையில் வீழ்ந்து போகும்
கொடுமையினை உம்செவியால் கேட்ப தற்கும்
ஒப்புகிறீர் என்றால்என் உயிரோ தப்பும்?
உளறிவிட்டால் மன்னிப்புத் தருவீர் அத்தான்—
கப்பலிலே பொன்னேற்றிக் கொண்டு வந்து
காலடியில் வைத்தாலும் தந்தை சொல்லும்

"மாப்பிள்ளை முகத்திலும்நான் விழிக்க மாட்டேன்!
மணவோலை கிழியட்டும்! நீங்கள் வந்து
கூப்பிட்டால் குந்தியுமே இருப்பேனா நான்?
கொடிமுல்லை படர்கின்ற தோப்பில் இன்பம்
சாப்பிட்டுப் பார்த்தோமே ஒருநாள், அந்தத்
தனியிடத்தில் நாளையெனைச் சந்திப் பீர்கள்!
காப்பாற்றும் பொறுப்பெல்லாம் உமக்கே யாகும்!
கைகோத்துச் சென்றிடுவோம் வருவீர் அத்தான்!"

பேரரசனும் சிறுமியும்

மூலம் : பெர்னுட்ஷா ★ தமிழாக்கம் : மு. அண்ணுமலை

நிழலைப் பார்த்து மனிதர்களாகவும் அதைவிடப் பேய்களாகவும் கற்பனை செய்துகொண்டு நடுங்கும் பயங்கரமான இரவுகளின் வரிசையிலே அந்தநாள் இரவையும் சேர்த்துக் கொள்ளலாம். சந்திரன் முகில் கூட்டங்களின் இடையே புகுந்து புகுந்து வெளிவந்து கொண்டிருந்தான். வெண்மையான முகிற் படலங்களுக்கிடையே போகும்போது அவன் ஒளிபெற்று விளங்கினுன். மங்கிய சாம்பலான முகிற் கூட்டங்கள் சந்திரனின் ஒளியை மழுக்கின. கருமையான முகிற் படலங்கள் முழுக்க முழுக்க மறைத்தன.

அந்தநாள் இரவோ அந்நாளின் பகற் போதைக் காட்டிலும் அத்துணை பயங்கரமானது என்று கூறிவிட முடியாது. இரவிலே இருளிலே நடந்து திரிவதைக் காட்டிலும் பகலிலே வெளிச்சத்திலே தலை காட்டுவது மிக ஆபத்தாக இருந்தது. அவ்விடத்தில் பிரஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் ஜெர்மானியரோடு போர் புரிந்து கொண்டிருந்தனர். பகற் பொழுதில் ஒவ்வொருவரும் குழிகளில் பதுங்கிக்கொள்ள வேண்டும். கணப்பொழுது தலையை வெளிக் காட்டினுல் அவர்கள் தலை அவர்களுக்கில்லை. அந்தப் பகுதியில் சில இடங்களில் சில திரைகள் தொங்கவிடப்பட்டு இருந்தன. குறிப்பிட்ட சில இடங்களை யாரும் கடந்து செல்லக்கூடாது என்பதற்காக அவை இடப்பட்டிருந்தன. இரவிலே அத்திரைகளும் இருப்பதில்லை. இரவு நேரத்தில் கண்ணயராது படை வீரர்கள் துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு திரிந்தாலும் ஒருவாறு கண்காணுமல் தப்பித்துக் கொள்ளலாம். என்றாலும், துப்பாக்கி வெடிச் சப்தத்தை நினையாமல் இருக்கவோ, சுட்ட இடத்திலே மாண்டு மடிந்து நாறிக் கிடக்கும் பிணங்களை நினைத்து நடுங்காமல் இருக்கவோ முடியாதுதான். அந்த நிலாவை ரசித்துக்கொண்டு உல்லாசமாய்த் திரிய யாரும் வெளிக் கிளம்பவில்லை என்றால் வியப்பில்லை. ரோந்து திரியும் படைவீரர்கள் எழுப்பும் ஒளிப்பிழம்புகள் உண்டாக்கும் வெளிச்சத்தில் ஒவ்வொரு பொருளையும் ஒவ்வொரு மனிதனையும் தெற்றெனக் காண முடிந்தது. இந்தப் பிழம்புகள் எழும்போது பகையிடத்து நுழைந்து வேவு பார்ப்போரும், காயம்பட்ட மனிதர்களைத் தேடுவோரும் சட்டென்று தரையிலே விழுந்து படுத்துக் கொள்ளுவார்கள். பிணக்கும்பலிலே தாமும்

ஒரு பிணம்போலப் பாசாங்கு செய்து கிடப்பர். பின்னர் ஒளிப் பிழம்பு அணைந்ததும் மீண்டும் எழுந்து தம் வேலைகளை மேற் கொண்டு செல்வர்.

இரவு பதினொன்றரை இருக்கும். நடமாட்டம் இல்லாத பொழுதில் ஒரு மனிதன் புதுமையாக அங்கு நடமாடிக் கொண்டிருந்தான். அவன் உளவறிவதற்காக வந்தவனில்லை. இறந்தவர்களைப் பார்க்க வந்தவனுமில்லை. மற்ற படைவீரர்கள் செய்யும் எந்தச் செயலையும் அவன் செய்வதாகத் தெரியவில்லை. வெறுமனே நடந்து கொண்டிருந்தான். சிறிது நிற்பதும் நடப்பதுமாக இருந்தான். சிறிது தூரத்தில் எழுப்பப்பட்ட ஒளிப்பிழம்பில் சிறிது அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. நடையை நிறுத்தி நிமிர்ந்து கைசேர்த்துக் கட்டிக்கொண்டு நின்றான். ஒளிப் பிழம்பு அணைந்து வீழ்ந்தபோது மீண்டும் தன் நடையைத் துவக்கினான். அவனுடைய காலடிகள் பெருமிதமாக வீழ்ந்தன. தரை பள்ளமும் மேடாகவும் பிணக் குவியல்களாகவும் கிடந்ததால் மெதுவாகவே நடக்க வேண்டியிருந்தது. அவன்தான் ஜெர்மானியப் பேரரசன் கெய்சர். ஒளிப்பிழம்பில் அவனைப் பார்த்தால் முறுக்கிவிடப்பட்ட மீசை நன்றாகத் தெரியும்.

மெதுவாக நடந்து கொண்டிருந்த அரசன் ஓரிடத்தில் சிறிது கால் தடுமாறி ஒரு பள்ளத்தில் விழவேண்டியதாயிற்று. அவன் ஏதோ ஒன்றைப் பிடித்துக் கொண்டதால் மெதுவாக எழுந்துவிட முடிந்தது. அவனது கைப்பிடிக்குள் அகப்பட்டது புல் பூண்டாக இருக்கலாம் என்று முதலில் நினைத்தான். ஆனால் அது ஒரு பிரஞ்சுக்காரனின் தாடியாக இருந்ததைக் கண்டான். அந்தப் பிரஞ்சுக்காரன் இறந்து பிணமாகிக் கிடந்தான். சந்திரன் கருமுகிலினின்று விடுபட்ட கணநேரத்தில் அந்தக் குழியில் கிடந்த மற்ற வீரர்களையும் பார்த்தான். ஜெர்மானியர், ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர் ஆகிய மூவகையினரும் கிடந்தனர். அவர்களைச் சிறிதுநேரம் உற்றுப் பார்த்தான். அவர்களும் அவனையே முறைத்துப் பார்ப்பது போல அவனுக்குத் தோன்றியதால் உடம்பு நடுங்க ஆரம்பித்தது. தான் என்ன சொல்லுகிறோம் என்று நினைக்காமலேயே, "நானில்லையே; அதை நான் செய்யவில்லையே" என்று ஜெர்மானிய மொழியில் கூறினான். தவறு செய்துவிட்டு முதலாளியிடம் திட்டுவாங்குகிற வேலைக்காரன் நாக்குளறித் தடுமாறுவது போன்றிருந்தன அரசன் நிலையும் வாசகமும். குழியை விட்டு வேறு திசைநோக்கி நகரத் தொடங்கினான். ஆனால் உள்ளத்தில் அமைதி வந்து சேரவில்லை. எனவே மனநிம்மதி ஏற்படும் வரை ஓரிடத்தில் அவன் அமர வேண்டியதாயிற்று.

அந்நேரத்தில் இன்னொரு வியப்பான நிகழ்ச்சி நடந்தது. இருளினின்று ஒரு மங்கலான சிறு உருவம் அசைந்தாடி வந்தது. முதலில் அவன் அது நாயாக இருக்கலாம் என நினைத்தான். ஆனால் காலடி ஓசையும் தகரக்குவளைச் சப்தமும் அந்நினைப்பை உறுதிப்படுத்தவில்லை. அருகே வந்ததும் அது ஒரு சிறுமியாக இருக்கக் கண்டான். அவள் கையிலே ஒரு தகரக் குவளையிருந்தது. அந்தச் சிறுமி பேரரசனைக் கண்டதும் யாதொரு வகையான அச்சமோ ஆச்சரியமோ அடைந்ததாகத் தெரியவில்லை.

"ஐயோ, எல்லாத் தண்ணீரும் செலவழிந்து போச்சே! என்ன செய்வேன்?" என்று சொல்லிக்கொண்டு 'ஓ' என்று தேம்பி அழத் தொடங்கினாள் அச்சிறுமி.

"ஐயோ பாவம். உனக்கு மிகவும் தாகமாக இருக்கிறதா? என்னுடைய பிளாஸ்கில் பானம் இருக்கிறது. தருகிறேன்...... ஆனால் அது உனக்கு மிகக் காரமாக இருக்குமே" என்றான் பேரரசன், இரக்கம் தோன்ற.

"எனக்கு ஒன்றும் தாகமில்லை; உனக்குத் தண்ணீர் வேண்டாமா? உனக்குக் காயம் எதுவும் ஏற்படவில்லையா?" என்றாள் சிறுமி.

"இல்லை. நீ எதற்காக அழுது கொண்டிருக்கிறாய்?" என்றான் அரசன்.

அச்சிறுமி விடாது தேம்பிக் கொண்டே அவனது முழந்தாளைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள். "இங்கே படைவீரர்கள் என்மேல் கோபமாக இருக்கிறார்கள். அந்தப் பள்ளத்தில் அடிபட்டுக் கிடக்கிறார்களே நான்கு பேர்—அவர்களைத் தெரியுமா? ஒரு 'டாமி' (Tommy) ஒரு 'ஹெயரி' (Hairy) இரண்டு 'போச்சே' (Boche)"

ஜெர்மன் படைவீரனை இனி நீ 'போச்சே' என்று அழைக்கக் கூடாது" என்று ஜெர்மானியப் பேரரசன் சற்று கடுமையாகவே எச்சரித்தான்..."அது பெரிய தப்பு" என்று மேலும் அழுத்தம் திருத்தமாகச் சொன்னான்.

"அப்படித்தான் சொல்லுவேன்; தப்பில்லை; அதுதான் சரி. என் அம்மா கூட ஜெர்மன்காரனைப் 'போச்சே' என்றுதான் கூப்பிடுவாள். ஆங்கிலேயனை 'டாமி' என்றுதான் அழைப்பாள். பிரஞ்சுக்காரனை 'ஹெயரி' என்றுதான் கூறுவாள். எல்லோரும் அப்படித்தானே கூப்பிடுகிறார்கள். என்னை மட்டும் கூப்பிடக் கூடாதென்று சொல்லுகிறாயே. ஒரு 'போச்சே' கண்ணாடி அணிந்திருக்கிறார். காலேஜ் வாத்தியாரைப் போலக் காணப்படுகிறார். இன்னொரு 'போச்சே' இரண்டு நாளாகப் படுத்திருக்கிறார். ஒருவரும் அசைய முடியாமல் படுத்திருக்கிறார்கள். நான் அவர்களுக்குத்

தண்ணீர் கொடுத்தேன். அந்தக் காலேஜ் வாத்தியாரைத் தவிர மற்றெல்லோரும் வாழ்த்தினார்கள். 'கடவுள் எனக்கு அருள் புரிவார்' என்று சொன்னார்கள். அப்பொழுது ஒரு ஒளிப்பிழம்பு எழுப்பப்பட்டதால் என்னை அவர்கள் ஓடிப்போய் விடும்படி விரட்டி விட்டார்கள். நேராக என்னை வீட்டுக்குப் போய்விடுமாறு வற்புறுத்தினார்கள். எவ்வளவு விரைவாகப் போய்விட முடியுமோ அவ்வளவு விரைவாகப் போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்று கட்டாயப் படுத்தினார்கள். போகாவிட்டால் காட்டிலிருந்து கரடிவந்து கடித்துத் தின்றுவிடும். அப்பா வந்து பிரம்பால் 'அடி அடி' என்று அடிப்பார் என்றெல்லாம் கூறினார்கள். அந்த ஜெர்மன் காலேஜ் வாத்தியார் 'அவர்கள் போகிறார்கள் முட்டாள்கள்' என்று உரக்கக் கத்திவிட்டு 'நீ வீட்டுக்கு விரைவாகப் போய்ச் சேர்' என்று முணுமுணுத்தார்" என்று சொல்லிய சிறுமி அரசனைப் பார்த்து, "நான் உன்னோடு இங்கு தங்கட்டுமா? இங்கு திரிவதென்றால் எனக்கு ஆசையாக இருக்கிறது. எங்க அப்பா அடிக்க மாட்டார்...... ஆனால்......கரடி....கடித்து..." என்று கூறித் தடுமாறினாள் சிறுமி.

"நீ என்னோடு தங்கியிருக்கலாம். கவலைப்படாதே. கரடி உன்னை ஒன்றும் செய்யாமல் நான் பார்த்துக் கொள்ளுகின்றேன். உண்மையில் இந்த இடத்தில் கரடி கிரடி ஒன்றும் இல்லை. நீ பயப்படாதே." என்றான் அரசன்.

"நிச்சயமாகவா?"

"ஆமாம்"

"அந்த 'டாமி'

பெரிய கரடி இருக்கிறது, குழந்தைகளைக் கண்டால் தின்று விடும் என்று சொன்னானே!"

"இங்கிலீஷ்காரன் ஒருநாளும் உண்மை பேசமாட்டான்" என்று பேரரசன் சிரித்துக் கொண்டே கூறினான்.

"முதலில் அவன் என்னிடம் மிக அன்பாக இருந்தானே. இப்படிப் பொய் சொல்லிப் பயமுறுத்திவிட்டானே. அடிபட்ட வலி தாங்காமல் ஏதேனும் உளறி யிருப்பானோ?" என்று சொல்லிவிட்டு அச்சிறுமி அழுதாள்.

"அப்படியில்லை. கண்ணே, அவர்களைப்போல நீயும் காயம் பட்டுத் துன்பப்படக் கூடாதே என்ற நல்லெண்ணத்தில்தான் சொல்லியிருக்கிறார்கள். ஆபத்தான இடத்தைவிட்டு அதனால் தான் நீங்கும்படி வற்புறுத்தி இருக்கிறார்கள்."

"எனக்கொன்றும் பயமில்லையே. நான் இரவில் காயம் பட்டவர்களுக் கெல்லாம் தண்ணீர் கொடுப்பது வழக்கம். என் அப்பா வீட்டைவிட்டு வந்து ஐந்து நாள் ஆகிவிட்டன. அவர் காயம்பட்டு வீழ்ந்து கிடக்கிறார். தாழமுடியாத தாகத்தால் மிக வருந்தினர்."

"நான் செய்யவில்லையே, நானில்லையே" என்று வழக்கம் போல் ஜெர்மன் மொழியில் சொன்னான் பேரரசன். அவல உணர்ச்சி அவன் உள்ளத்தை ஆட்சி செய்தது.

"நீ ஒரு 'போச்சே'யா?" என்று கேட்டாள் சிறுமி. அரசன் தொடர்ந்து பிரஞ்சு மொழியிலே பேசிவிட்டு இடையே 'நானில்லையே' என்பதை மட்டும் அடிக்கடி ஜெர்மன் மொழியில் பேசியதால் அவனை ஜெர்மானியன் என்று ஐயப்பட்டாள். அச்சிறுமி அரசனைப் பார்த்து மேலும், "உன்னை இங்கிலீஷ்காரன் என்று நினைத்தேன்; ஆனால் நீ நன்றாகப் பிரஞ்சு பேசுகிறாய்." என்றாள்.

"நான் பாதி ஆங்கிலேயன்" என்றான் அரசன்.

"வியப்பாக இருக்கிறதே. அப்படியானால் நீ அதிகமான கவனத்தோடு இருந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் உன்னை இரண்டு கட்சியாரும் சுட்டுத் தள்ளிவிடுவார்கள்."

அரசன் புன்னகை புரிந்தான். வெண்முகிலிடையே திங்கள் வந்தபோது அரசனை அச்சிறுமி சற்றுத் தெளிவாகப் பார்க்க முடிந்தது.

"நீ நல்ல சட்டை போட்டிருக்கிறாயே. என் சட்டை ரொம்பப் பழையது. நன்றாகவே இல்லை. அழுக்காகாமல் நீ தூய்மையாக வைத்திருக்கிறாயே. குண்டு வெடிக்கும்போது உன் உடை அழுக்காகாமல் எப்படிப் படுத்துக் கொள்வாய்?" என்று கேட்டாள் சிறுமி.

"குண்டு விழும்போது நான் படுக்கமாட்டேன். அப்படியே நின்று கொண்டுதான் இருப்பேன். அதனால்தான் என் ஆடைகள் மிகத் தூய்மையாக இருக்கின்றன" என்றான் அரசன்.

“நீ அப்படி நிற்கக்கூடாது அவர்கள் பார்த்தால் உன்னை அநியாயமாகச் சுட்டுவிடுவார்கள்.”

“சரி, நீ கூட இருக்கும்போது உனக்காக நானும் படுத்துக் கொள்கிறேன்.” என்று சொல்லி நிறுத்திவிட்டு அரசன் சிறுமியை நோக்கி, “வா, வீட்டுக்குப் போவோம். உன் வீடு எங்கே இருக்கிறதென்று சொல்; அங்கே கூட்டிக்கொண்டு போய்ச் சேர்த்துவிடுகிறேன்” என்றான்.

அவள் சிரித்தாள். “எங்களுக்கேது வீடு? முதலில் ஜெர்மன்காரர்கள் எங்கள் ஊரைத் தாக்கிப்பிடித்துக்கொண்டனர். பின்னால் அதைப் பிரஞ்சுக்காரர்கள் பிடித்தனர். ஆங்கிலேயர் ஜெர்மானியரை ஓட்டிவிட்டுத் தமது வசம் ஆக்கிக்கொண்டனர். இப்படிப் பல முற்றுகைக்காளாகி எங்களூர் நாசமாகிவிட்டது. எங்கள் வீடு ஏழு முறை தாக்கப்பட்டதாம். மாடு கட்டும் சிறு கட்டுத்துறை பதினொன்பது முறை தாக்கப்பட்டதாம்.”

“நானில்லை; நான் செய்யவில்லை” என்றான் அரசன், ஜெர்மன் மொழியில். அவன் உள்ளத்தைத் துன்ப அலை தொட்டுப் பார்த்தது.

சிறிது மன அமைதி பெற்றதும் அரசன் பேசத் தொடங்கினான். “நீங்கள் இப்பொழுது எங்கு வாழ்கிறீர்கள்?”

“நினைத்த இடத்தில் ஜாகை. இன்ன இடம்தான் என்று எப்படிக் குறிப்பிட்டுச் சொல்ல



டாக்டர்: ஒண்ணுமில்லேங்க ஹார்ட் வீக். அவ்வளவுதான், கொஞ்சம் சத்துள்ள ஆகாரமா நிறையச் சாப்பிடுங்க, சரியாகப் போகும்.

முடியும்? நீ எதற்காக உடைந்த வீட்டைப்பற்றி இத்துணை கவலையோடு கேட்கிறாய்? நீ என்ன செங்கல் வியாபாரியா?”

“இல்லை கண்ணே, நான் ஒரு கெய்சர்.”

“கெய்சர் ஒருவர்தானே; ஒருவர்க்குமேல் பல கெய்சர்கள் இருப்பார்கள் என்று எனக்குத் தெரியாது.”

“இல்லை. மூன்று பேர் இருக்கிறார்கள்.”

“அந்த மூவருக்கும் முறுக்கிவிடப்பட்ட பெரியமீசை இருக்குமா?” என்று ஆச்சரியம் தோன்றக் கேட்டாள் சிறுமி.

“அவர்களுக்குத் தாடி இருக்கும்”

“கெய்சருக்கு என்ன வேலை? சண்டை செய்வாரா? அல்லது காயம் பட்டவர்களுக்குத் துணை



"என்னா கொளுப்பு! எவ்வளவு கஷ்டப்பட்டு எனக்குக் கொள்ளு வாங்கி வச்சிருந்தேன்! அத்தினியும் தின்னுட்டியே."

செய்வாரா?" என்று வினவினாள் சிறுமி.

"அவர் அப்படியொன்றும் செய்யமாட்டார். யோசனை செய்வார்."

"ஆலோசனையா? அப்படி என்ன ஆலோசிக்க வேண்டியிருக்கிறது?" என்றாள் சிறுமி. அவள் பொல்லாக் குறும்புக்காரி. அவளது வாய் கொஞ்சநேரம் சும்மா இருக்காது. யாரையாவது சந்தித்தால் கேள்விக்கு மேல் கேள்வி போட்டு ஆளைத் துளைத்துக் கொண்டிருப்பாள். அவளுடைய தாயும் மற்றவர்களும் அப்படிக் கேள்விகள் கேட்கக்கூடாது என்று பல முறை எச்சரித்திருந்தாலும் அந்தப் பண்பு அவளைவிட்டு அகன்றபாடில்லை.

"கெய்சர் ஏது சொல்வதற்கு இருப்பின் அங்கே மேல் யோசனை எதுவும் இருக்காது. நேராகச் சொல்லவேண்டியது தான்!" என்றான் கெய்சர்.

"கெய்சராக இருப்பது ரொம்ப விநோதமாக இருக்கிறது. அது போகட்டும் — காலம் கடந்த இந்நேரத்தில் நீ என்ன செய்வதற்காக இங்கு வந்தாய்? உனக்குத்தான் காயம் எதுவும் இல்லையே?"

"நான் சொன்னால் யாரிடமும் சொல்லிவிட மாட்டாயல்லவா, அது பெரிய ரகசியம்."

"நீ என்னிடம் சொல்லேன்... ரகசியம் என்றால் எனக்கு நிறைய விருப்பம்." என்றாள் சிறுமி.

"என்னுடைய போர் வீரர்களைப் பார்த்து நான் குழிகளில் பதுங்கியிருந்து அவர்களைப் போல் சண்டைபோடுவதற்கில்லை. நான் அவர்களுக்காக முக்கியமான யோசனைகளில் ஈடுபட்டிருக்கிறேன். நான் கொல்லப்பட்டுவிட்டால் என் போர்வீரர்கள் தலைமைக்கு ஆள் இன்றித் தவிப்பார்கள். வீணே தாக்கப்பட்டு நிலைகுலைந்து மடிந்து போவார்கள்."

"நீ பொய் சொல்கிறாய். என்னுடைய அண்ணன் கொல்லப்பட்டபோது இன்னொருவன் ஒரு அடி முன்னால் வந்து அண்ணன் இடத்திலே நின்று கொண்டு சண்டை போட்டான். என் அண்ணன் இறந்தபோது போர் ஒன்றும் நின்றுவிடவில்லையே. சண்டை நடந்து கொண்டுதானிருந்தது. ஒரு நிமிஷநேரம் நின்றிருப்பார்கள். அவ்வளவுதான். அதைப்போலத் தானே எல்லாம். நீ இறந்தால்

உனக்குப் பதில் இன்னொருத்தர்......"

"ஆம். என் மகன் அவ்விடத்தை நிரப்புவான்," என்ருன் அரசன்.

"அப்படியிருக்க, நீ ஏன் துணிந்து பொய் சொன்னுய்?" என்ருள் சிறுமி.

"அந்த நிலைக்கு நான் கொண்டு வரப்பட்டிருக்கிறேன். அதற்காகத்தான் ஒரு அரசன் உயிர் வாழவேண்டியிருக்கிறது. இடத்தைவிட்டு எழுந்து நின்று தானும் நம்பாமல் பிறரும் நம்பாமல் சொல்லும்படியாகத்தான் அரசன் வைக்கப்பட்டிருக்கிருன். இதை நான் கண்கூடாகப் பல மனிதர்களின் முகபாவத்திலிருந்து கண்டு கொண்டேன். அவர்கள் என்னை நம்பவில்லை என்பதையும் என்னை ஒரு கோழையாக மதிக்கிருர்கள் என்பதையும் நான் உணர்ந்துகொண்டேன். இன்றைய இரவு படுக்கைக்குச் சென்றபோது எனக்குத் தூக்கமே வரவில்லை. தூங்குவது போல் பாசாங்குசெய்து, எல்லோரும் தூங்கச் சென்றபின் அவர்களுக்குத் தெரியாமல் அரண்மனையினின்று வெளிக்கிளம்பினேன். நான் ஒரு கோழையன்று என்பதை எனக்குள் உறுதிப்படுத்திக் கொள்ளத்தான் இவ்வாறு வெளிக்கிளம்பி வந்தேன். அதனுல்தான் ஒளிப்பிழம்பு சீறிவிழுந்து எரியும்போது கூடப் படுத்துக் கொண்டு தப்பித்துக் கொள்ளாமல் நிற்கிறேன்" என்ருன் அரசன்.

"அப்படியாயின் இதை நீ ஏன், பகலிலே செய்திருக்கக் கூடாது? அப்பொழுதுதானே உண்மையான ஆபத்து தெரியும்."

"அவர்கள் என்னை வெளியே செல்ல அனுமதிக்கமாட்டார்கள்".

"ஐயோ பாவம். அரசர்களின் வாழ்வு பரிதாபகரமாக இருக்கிறதே!... கெய்சர், உன் பரிதாபமான வாழ்வுக்கு இரங்குகிறேன். உனக்குக் காயம் விழாது. காயம்பட்டால் நீ பயப்படாதே. நான் இருக்கிறேன், தண்ணீர் கொண்டுவர "

பேரரசன் அவள் கூறிய மறுமொழியைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தான். அவள்மீது அளவு கடந்த பற்றுதல் உண்டாயிற்று. அவள் கன்னத்தைப் பிடித்து ஒரு முத்தம் கொடுத்தான். அவளைக் கையைப் பிடித்துக் கூட்டிக் கொண்டு ஆபத்தில்லாத இடமொன்றைத் தேடி நடந்தான். அவளும் அவனிடம் எல்லையற்ற அன்பு கொண்டாள். அந்நேரத்தில் அவள் உள்ளத்தில் வேறு உணர்ச்சி ஒன்றும் ஊடாட்டில்லை. அவர்கள் நடந்துகொண்டிருக்கும்போது அவர்களுக்குத் தெரியாமல் தலைக்கு நேர் வலது பக்கமாக ஒரு ஒளிப்பிழம்பு தோன்றியது. நெடியவனுக இருந்த அரசனை அந்த வெளிச்சத்தில் மிக எளிதாக விளங்கிக் கொள்ளலாம்.

அடுத்த கணம் பயங்கரமான சத்தம் கேட்டது. அவ்வொலி

அவர்களிருந்த பக்கம் நெருங்கி வந்துகொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து ஒரு பெரிய வெடி குண்டு மதயானை வருவது போன்றுவந்துகொண்டிருந்தது. அதை அவனால் பார்க்க முடிந்தது. பாலத்துக்குள் நுழையும் ரயில் எஞ்சினைப்போல அது வந்தது. அரசன் தன் முகத்தை உடம்பில் புதைத்துக்கொண்டு தரையோடு தரையாகப் படுத்துக் கொண்டான். சிறுமியின் நிலைமை என்னவாகும் என்று சற்று நினைக்கத்தொடங்கினான். அவன் உள்ளம் கலங்கியது. அவள் ஒரு நிமிடத்தில் சுக்கு நூறாக நொறுங்கிப்போய்விடுவாளே என்று நினைக்கும்போது அவன் உடலெல்லாம் நடுங்கியது. அவள் கிடந்த இடத்தை நோக்கித் தாவி அவளைத் தன் உடலோடு சேர்த்து அணைத்துக் கொள்ளலாம் என்று எழ முயற்சித்தான். முழந்தாளை ஊன்றி எழுவதற்கு முன்னே வெடிச் சப்தம் நெருங்கிவிட்டதால் அவன் செயலற்றுக் கிடந்தான். அதைச் சாதாரண வெடிச்சப்தம் என்று கூறிவிட முடியாது. நிலம் அதிர, ஊழிக் கால உலகை நினைவுப்படுத்தியது அச் சப்தம். உடலின் உட்கூறுகள் அனைத்தும் சிதறிவிட்டன போல அரசனுக்கு ஓர் உணர்ச்சி தோன்றியது. கொஞ்சநேரம் கழித்து சற்று அமைதி நிலவிய பின்னர் மெதுவாக எழுந்தான். காலில்தான் நிற்கிறோமா, தலை கீழாக நிற்கிறோமா என்பதை அவனால் நிதானப் படுத்திக் கொள்ள முடியவில்லை. உண்மையில் இரண்டாலும் அவன் நிற்கவில்லை. அடிக்கடி அவன் எழுவதும் கீழே விழுவதுமாக இருந்தான். தலை சுற்றியது.

சிறிது நேரம் ஓய்வுக்குப் பின்னர் எதிரிலிருந்த மரத்தைப் பிடித்துக்கொண்டு எழுந்து நின்றான். அந்த மரம் குண்டு விழுவதற்கு முன்னால் அவன் படுத்த இடத்திலிருந்து அதிக தூரத்தில் இருந்தது. வெடித்த பின், அவன் அந்த மரத்தடிக்கு அவனையறியாமலேயே தள்ளிக் கொண்டு வரப்பட்டிருந்தான். அரசன் சிறுமி என்ன ஆனாள் என்று அவசரத்துடன் பல பக்கங்களிலும் திரும்பிப் பார்த்தான். "எங்கே அவள்?" என்று தனக்குள்ளே கேட்டுக்கொண்டான்.

"இங்கே இருக்கிறேன்." என்று மரத்தின் மேலிருந்து ஒரு குரல் கேட்டது. அது அந்தச் சிறுமியின் குரல்தான்.

"கடவுளுக்கு என் நன்றி" என்று சொல்லிவிட்டு அரசன் அந்தக் குரல் வந்த திக்கை நோக்கி, "உனக்கொன்றும் காயம் இல்லையே?"

"நான் எத்தனையோ துண்டுகளாகச் சிதறடிக்கப்பட்டுவிட்டேன். இரண்டாயிரத்து முப்பத்தேழு சிறு துண்டுகளாக... வெடித்த குண்டு நேராக என்னைத்தான் தாக்கிற்று. என் சுண்டு விரல் அரை மைலுக்கு அப்பால் தெறித்து ஓடிவிட்டது. கைக்கட்டைவிரல் இந்தப் பக்கம் அரை மைல் தூரத்தில்

தெறித்து விழுந்து கிடக்கிறது. என் நான்கு கண் இமைகளும் அந்த நால்வர் இறந்து கிடக்கும் குழியில் போய் விழுந்துவிட்டன, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்ருக... எனது ஒரு பல் உன் தலை முடியில் விழுந்திருக்கிறது. எஞ்சிய உறுப்புக்கள் மண்ணேடு மண்ணுய் மக்கிக்கொண்டிருக்கின்றன.''

''நானில்லையே நான் செய்யவில்லையே'' என்று வழக்கம் போல் ஜெர்மன் மொழியில் சொன்னுன் அரசன். அவனது குரலோ யாரும் கேட்டு இரக்கம் கொள்ளுமாறு இருந்தது. ஆனல் அந்தச் சிறுமியின் குரல் இரக்கம் காட்டவில்லை.

''நீ செய்தால் என்ன, செய்யாவிட்டால் என்ன? அதைப்பற்றி இப்பொழுது யார் கவலைப்படுகிருர்கள்! குண்டு வெடிக்கும் போது நீ வாரிச்சுருட்டி யடித்துக் கொண்டதை இப்பொழுது நினைத்தாலும் சிரிப்பு வருகிறது. நான், நீ படுத்துக்கொண்டதைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன்; சிரித்துக்கொண்டே கிடந்தேன். குண்டுபட்ட வலி கூட அந்தச் சிரிப்பிலே மறைந்து விட்டது. உன்னைப் பார்க்க இன்னும் விநோதமாக இருக்கிறது. மரத்தைப் பிடித்துக்கொண்டு குடிகாரனைப்போல் அசைந்தாடிக்கொண்டிருக்கிருய்.'' என்றது சிறுமியின் குரல்.

அரசன் காதில் அச்சிரிப்பொலி நன்கு விழுந்தது. அதைத் தொடர்ந்து பல குரல்கள் சிரித்

தது தான் அரசனுக்கு ஆச்சரியத்தையும் திகைப்பையும் உண்டாக்கிற்று.

''இன்னும் யாரும் சிரிக்கிருர்களா? உன்னேடு கூட வேறு யாரும் இருக்கிருர்களா?''

''ஓ! நிறைய இருக்கிருர்கள். குழியிலே கிடந்தார்களே அந்த நால்வரும் என்னேடு கூடத்தான் இருக்கிருர்கள்.''

''டே நீ பொறுப்பாளியில்லையா? நீ செய்யவில்லையா?'' என்றது ஒரு குரல். அதைத் தொடர்ந்து பல குரல்கள் ஏளனமாகச் சிரித்தன. ஒரு சாதாரணப் பட்டாளத்தான் ஜெர்மானியப் பேரரசனை 'டே' என்று கூப்பிட்டதுதான் பல குரல்களின் நகையாடலுக்குக் காரணமாயிருந்தது.

''எனக்குரிய மரியாதை எதுவென்று நீங்களே காட்டி, என்னை அப்படி ஏற்றுக்கொள்ளும் வகைக்குப் பழக்கப்படுத்திவிட்டு இப்பொழுது தர மறுக்க

லாமா? தயவு செய்து தர மறுக்காதீர்கள். நானாகவா என்னைக் கெய்சராக ஆக்கிக்கொண்டேன்? நீங்கள் தான் அப்படி ஆக்கினீர்கள்! சாதாரண மனிதனுக்கிருக்கும் சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் மனமகிழ்ச்சியையும் தர மறுத்துவிட்டீர்கள். நீங்கள் தான் என்னை வழிபடும் பொருளாக ஆக்கினீர்கள். அதனால் இப்பொழுது எனக்குரிய மரியாதையைப் பெறாமல் விடச் சம்மதிக்கமாட்டேன். எனக்குரிய மரியாதையைக்காட்டும்படி உம்மையே ஆணையிடுகிறேன்."

"சும்மா என் கத்திக்கொண்டிருக்கிறாய்? அவர்கள் பறந்து போய்விட்டார்கள். உன் பேச்சை இருந்து கேட்கவேண்டும் என்று ஒரு நியதியும் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது. உன்னைப் பற்றி அவர்களுக்கு இப்பொழுது கவலையில்லை. உன்னை ஒரு பொருட்டாகவே அவர்கள் மதிக்கவில்லை. இங்கு வேறு யாரும் இல்லை. நானும் அந்தக் காலேஜ் வாத்தியார் மட்டுந்தான் இருக்கிறோம்."

"நான் அந்த பட்டாளத்தான்களோடு சேர்ந்து போகமாட்டேன் உன் மூதாதையர்களைப் பற்றி வாயில் வந்ததைச் சொல்லிக் கயிறு திரிப்பதற்காகத்தான் நீ என்னைப் பேராசிரியராக ஆக்கினாய். அந்த உண்மை அவர்களுக்குத் தெரிந்துவிட்டது" என்றது கல்லூரி ஆசிரியரின் குரல்.

"அட முட்டாளே! நீ உன் மூதாதையைப்பற்றி எப்பொழுதாவது உண்மையைச் சொன்னேன் என்று சொல். பார்ப்போம்" ஒன்றும் மறுமொழியில்லை. சிறிது நேர அமைதிக்குப் பின்னர் அந்த ஜெர்மன் கல்லூரி ஆசிரியனும் போய்விட்டான்.

"அவனுடைய மூதாதை, உன்னுடைய மூதாதை அல்லது என்னுடைய மூதாதையை விட ஒன்றும் உயர்ந்திருக்க முடியாது. எல்லோரும் ஒரே வரிசையில் நிற்பதற்குரியவர்கள் தாம்......... நானும் போகப்போகிறேன். வெடிக்கு இரையாகுமுன் உன்னை நான் நேசித்தேன் என்பது உண்மைதான். ஆனால் இப்பொழுது எனக்கு நீ ஒரு துரும்பாகவும் படவில்லை...போகட்டுமா..."

"குழந்தாய், நீ எப்படி நினைத்தாலும் சரி. நான் உன்னை எப்பொழுதும் போலவே நேசிக்கிறேன்" என்றான் பேரரசன்.

"ஆனால் நான் உன்னை அப்படி ஏற்றுக்கொள்ளவில்லையே....... நான் போகிறேன்......நான் உயிரோடிருந்து என்ன பயன்? குளிரிலும் வாடையிலும் பசியிலும் நலிந்து வருந்துவதைக் காட்டிலும் சுதந்திரமாகப் போவது நல்லதல்லவா! நீ அவற்றைப் பற்றித் துளிகூடச் சிந்தித்ததுகிடையாது...சரி...நான் போகட்டுமா"

"கொஞ்சம் நில்; போய் விடாதே. நான் தனியாக இருக்கிறேன்."

"தனிமையை நினைத்து வருந்துகிறாயா? என்னோடு வா வேண்டும் என்று விரும்பு

கிறாயா? உன்னுடைய போர் வீரர்களிடம் பெரிய துப்பாக்கியைக் கொடுத்து உன்னைச் சுடும்படி சொல். நான் சுடுபட்டு வீழ்ந்ததுபோல் நீயும் விழு. என்னைப்போல் நீயும் விடுதலை பெற்று என்னிடம் ஓடி வந்துவிடலாம். நீ விரும்புவதுபோல் இருவரும் ஒன்றாகப் பறந்து செல்வோம். நீ அவ்வாறு செய்தாலொழிய நான் இங்கே உனக்காகத் தங்கியிருக்க முடியாது."

"நான் வர வாய்ப்பில்லை; வசதியில்லை."

"ஏன்..."

"அப்படிச் செய்துகொள்வது வழக்கத்திற்கு மாறானதாகும். வழக்கத்தை உதறித் தள்ளி நினைத்தபடி செய்யும் அரசர்களின் காலம் மலையேறிவிட்டது. சம்பிரதாயங்களின் அடிமை தான் நான்......பேருக்குத்தான் அரசனாக இருக்கிறேன்." என்றான் அரசன்.

"உன் வார்த்தை புதிதாக இருக்கிறதே. நான் கேட்டதே இல்லையே. அரசன் என்றால் நிலத்திலிருந்து பிரிந்து வர முடியாத மண் கட்டியா என்ன! அதில் என்ன அவ்வளவு கஷ்டம்?" என்று கேட்டது குழந்தையின் குரல்.

"ஆமாம். அதைப்போலத் தான்" என்றான் அரசன்.

"அப்படியானால் நாம் கொஞ்ச நேரம் பொறுத்திருப்பாம். பிரெஞ்சுக்காரனுடைய அல்லது ஆங்கிலேயனுடைய குண்டு உனக்கு ஒரு முடிவைக் காட்டும் வரையிலும் தங்கியிருப்போம்... என்ன......மனமொடிந்து போகாதே. நீ வெளிச்சத்தில் நின்றுகொண்டிருப்பதை அவர்கள் கண்டுகொண்டால் உடனே காரியத்தை முடித்து விடுவார்கள். நான் உன்னை முத்தமிட்டு விட்டு விடை பெற்றுக்கொள்ளப் போகிறேன். நான் விடுதலை பெறுமுன் நீ என்னை இனிது முத்தமிட்டாய். ஆனால் இப்பொழுது நான் கொடுக்கப் போகும் முத்தத்தை உன்னால் உணர்ந்துகொள்ள முடியாது என்று கருதுறேன்." என்றது குழந்தையின் குரல்.

சிறுமி கொடுக்கப் போகும் முத்தத்தை உணரவேண்டும் என்று மிக முயன்றும் அரசனால் உணர முடியவில்லை. என்றாலும் ஏதோ ஒன்றைச் சிறிது பார்க்க முடிந்தது. அவளது குரல் வந்த திக்கை நோக்கித் திரும்பினான். மரத்திலிருந்து அச்குழந்தை இரண்டு இறக்கைகளுடன் தூய்மையான மலருடலோடு மிக அலட்சியமாகப் பறந்து கீழே இறங்கியது. அவனது கழுத்தில் கைகளைப் போட்டுக் கொண்டு ஒரு முத்தம் கொடுத்து விட்டுப் பறந்து சென்றது. மங்கிய நிலவொளியில் அழகான மலருடலாகத் தெரிவதற்குப் பதிலாக ஆந்தைபோலத் தெரிந்திருக்கவேண்டும். ஆனால் அவன் மிகத் தெளிவாக அச்சிறு உடலைப் பார்த்தான். அவளைப் பிரியும்போது சொல்ல முடியாத துயரடைந்தான். ஆனால் அந்த …வல உணர்ச்சியும் அவனது …சிகளும் திடீரெனத் தடைப்

197798

பொழுதுபோக்கு

உமக்கு இலக்கியத்தின் மீது முழுப்பற்றும் இருக்கட்டும். ஆனால் உங்கள் முழு நேர உழைப்பையும் அதற்காகச் செலவழித்துவிடாதீர்கள். அது உம்மைக்கொன்றுவிடும். எழுதும் தொழிலை ஒரு பொழுதுபோக்காகக் கொள்ளுங்கள்,

— புதுமைப்பித்தன்

பட்டன. உண்மையான மனிதர்கள் அவனோடு அப்போது பேசியதால் அந்த நிலை கலைந்தொழிந்தது. அவர்கள் அங்கு வந்ததை அவன் கவனிக்கவே வில்லை. அவர்கள் அவனது இரு அரசியல் அலுவலாளர்களாவர். பயபக்தி மரியாதைகளுடன், "தங்களைக் குண்டுகள் ஏதேனும் ஆபத்துக்குள்ளாக்கினவோ ?" என்று கேட்டனர். அவர்கள் பேசத் தொடங்கிய அந்த நிமிஷத்தில் அச்சிறு தேவதை மறைந்தது. ஒரு நிமிஷம் அவன் அவர்களுடன் பேசவில்லை. அந்தத் தேவதையை அவர்கள் விரட்டிவிட்டார்களே என்ற கோபத்தால் அவன் வாய் பேசாது நின்றான். "சிறைச் சாலைக்கு வழியைக் காட்டுங்கள்" என்ற சொற்கள்தாம் அவன் வாயிலிருந்து வெளிவந்தன. அவர்களால் அரசன் சொன்ன வார்த்தைகளுக்குப் பொருள் உணர்ந்துகொள்ள முடியவில்லை. அவனைப் பைத்தியம் போல அதிசயித்து நோக்கினர். அரசன் அவர்களிடம் அவனுடைய இருப்பிடத்துக்கு வழி காட்டுமாறு கேட்டான். அவர்கள் காட்டினார்கள். அரசன் அவர்களுக்கு முன்னால் நடந்துகொண்டிருந்தான். காவலாளர்கள் அவனுக்குச் செலுத்தவேண்டிய மரியாதையை வீட்டை அடையும் வரை செலுத்தினர். அந்த இரண்டு அலுவலாளர்களும் அம் 'மரியாதை'களுக்குப் 'பதில் மரியாதை' செய்துகொண்டு வந்தனர். அரசன் படுக்கைக்குச் செல்வதற்கு விடைபெற்றுக்கொண்டு உள்ளே நுழையப் போனான். அப்போது அவ்விரு அலுவலாளர்களில் ஒருவன், "நடந்தவைகளைப்பற்றித் தாங்கள் ஏதாவது ஒரு அறிக்கை தருகிறீர்களா?" என்று கேட்டான். "நீங்கள் இருவரும் சரியான அடிமுட்டாள்கள்" என்று அரசன் 'சட்'டென்று விடையளித்தான். அது கொஞ்சம் கடுமையானதுதான்.

இருவரும் ஒருவரையொருவர் திகைத்து இமை கொட்டாது நோக்கிக்கொண்டனர். அவர்களில் ஒருவன், "எல்லாப் பெரிய மனிதர்களும் சுய புத்தியில்லாத குடியர்களைப் போன்றவர்கள்" என்று கூறினான். அதுவும் கொஞ்சம் கடுமையானதுதான். ஆனால் நல்ல வேளையாக அரசன் அவர்கள் சொன்னதைக் காது கொடுத்துக் கேட்கவில்லை. அதனால் ஒன்றும் வந்துவிடாது. எப்பொழுதுமே படை வீரர்கள் கெட்ட சொற்களைக் கூறினாலும் எதையும் மனத்துள் வைத்துக்கொண்டு அர்த்தத்துடன் பேசமாட்டார்கள்.

போன் : 55214 தந்தி : "விமானம்"

ரசிகத் தோழர்களுக்கு இதோ ஒரு பவுன் பரிசு!

ரத்தக் குறி

★ மானமே பெரிதென்று வாழ்ந்த தமிழ் மக்களிடையே வடநாட்டுப் புல்லுருவி ஒன்று சிரிப்புச் சிந்து பாடிச் சிங்கார வாழ்வு வாழ்ந்து சீரழிந்த விநோதத்திலே...

★ 'கலை, கலை' என்று கூறிக் கன்னிவேட்டையாடிக் காமக் கலை வளர்த்த மைனர் வட்டாரத்திலே...

★ கண்களை வெட்டிக் கற்பைத் தட்டிக் காசுகளைக் கொட்டிக் கேட்கும் வெட்டவெளிச் சிங்காரிகளின் அழைப்பிலே.........

சிந்திப்பெருகி ஓடும் ரத்த ஆற்றிலே அது பதிந்துவிட்ட விநோதம்!

ரத்தக் குறி

ஆசிரியர் வாசவன் எழுதியது

1—9—51ல் விற்பனைக்கு வரும்.

தனிப் பிரதி அணா 12

ஏஜண்டுகளுக்கு 25% கமிஷன் உண்டு. வேண்டிய பிரதிகளுக்கு முன்கூட்டியே பதிவு செய்துகொள்ள வேண்டும்.

வி. பி. பி. யும் உண்டு.

புத்தகத்தைப்பற்றி நேர்மையான விமரிசனம் செய்யும் தோழர்களுக்கு ஒரு பவுன் பரிசு தரப்படும். பரிசு பெற்றவர் விவரம் 15-11-51 ஹிந்துவில் பிரசுரிக்கப்படும்.

சக்திவேல் பிரசுரம்

51-A, அரண்மனைக்காரத் தெரு, சென்னை – 1

15-8-51ல் வருவது :

பூகம்ப இரவு

தமிழ்ச் செல்வர் "வேலவன்" எழுதியது

விலை அணா 8

இப்பொழுது விற்பனையாகிறது :

கடற்கரை மோகினி

புரட்சிச் சிங்கம் "ஜெகசிற்பியன்" எழுதியது

விலை அணா 8

இப்பொழுது விற்பனையாகிறது!

உள்ளத்தைக் கிள்ளி உணர்ச்சிக்கு
உயிர் ஊட்டும் ஒப்பற்ற
கருத்தோட்ட நாவல்!

ஜெகசிற்பியன் எழுதிய

பருவ மங்கை

மூவர்ண முகப்புச் சித்திரம்!
முதல்தரமான புத்தக அமைப்பு!

விலை அணா எட்டு

★★★

சிந்தனையைக் கிளறி, துணிவான கருத்துக்களைத்
தூவும் துல்யமான காதல் நவீனம்!

ஜெகசிற்பியன் எழுதியது

கண்ணைப்பறிக்கும் மூவர்ண அட்டை

விலை அணா எட்டு

ஏஜண்டுகளுக்கு 25% கமிஷன் உண்டு.
உடனே உங்கள் பிரதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.

எமது கொழும்பு ஸோல் ஏஜண்ட்:
மோகன் அண் கோ., லிமிடெட், கொழும்பு.

விவரங்களுக்கு:

டம் டம் பதிப்பகம்

த. பெ. எண். 1236 — சென்னை – 1

வெறும் கலாட்டா

"உங்கள் வாக்கு யாருக்கு?"
என்று 'பொன்னி' ஆசிரியர் வாசகர்கள் உள்ளத்திலே ஒரு 'கொக்கி'யைப் போட்டாலும் போட்டார்—அப்பப்பா, அது என்னென்ன வேலையெல்லாம் செய்துவிட்டது தெரியுமா?

நன்றாகக் குறட்டை விட்டுக் கொண்டு கும்பகர்ணனோடு கதை பேசிகொண்டிருந்த தமிழர்களின் முதுகிலே ஒரு குத்து விட்டு அவர்களைத் தட்டி எழுப்பியது. அதுமட்டுமல்ல, அவர்களைக் கரகரவென்று இழுத்துவந்து நாற்காலியிலே உட்கார வைத்துப் பேனாவையும் பேப்பரையும் கையிலே திணித்தது. அந்தப் பேனாவோ, பரபரவென்று வெள்ளைக் காகிதத்திலே பவனி வந்து தன்னுடைய அருமை பெருமை ஆண்மையை யெல்லாம் கொட்டித் தீர்த்தது! கடைசியில் இஞ்சினியரிங் காலேஜ் பிரின்ஸ்பாலுக்கு அப்ளிகேஷன் 'பேல்'கள் குவிந்த கதையாகிவிட்டது ஆசிரியரின் பாடு! (இஞ்சினியரிங் காலேஜ் பிரின்சிபால் கதை என்னவென்று கேட்கிறீர்களா? அதை 'இன்னொருவாட்டி' சொல்லுகிறேன். இப்போது ஆசிரியர் படும் அவஸ்தையைக் கொஞ்சம் கேளுங்கள்!)

அவர் தினசரி தன்னுடைய அறையிலே நூற்றுக் கணக்கான கடுதாசிகளோடு 'பாக்சிங்' செய்ய வேண்டியதாய்விட்டது. "யாருக்கு உங்கள் வாக்கு என்று கேட்டீர்கள்? ஹஹ்ஹா... நன்றாகக் கேளுங்கள்; இதோ!" என்று கையை மடக்கி முஷ்டியை உயர்த்திக்கொண்டு...... ஆனால் ஆசிரியர்களெல்லாம் 'பாக்சிங் சாம்பியன்'களாக இருந்துவிட முடியுமா? அவரோ அப்பாவி... சாது! வம்பு, தும்பு வழிகளுக்கே போகமாட்டார். அவ்வளவு கடிதங்களையும் ஒரு கோணிச் சாக்கில் போட்டு என்னிடம் கொடுத்துவிட்டார். நான்தான் கில்லாடியாயிற்றே! இப்போது நான் அவற்றோடு 'போரா'டித்துக்கொண்டிருக்கிறேன்.

●

இதுமட்டுமல்ல, நான் எங்கு போனாலும் சரி, இந்த நெல்லிக்காய் மூட்டையை அவிழ்க்காமல் இருப்பதில்லை! காசினோ கபேக்குக் காப்பி குடிக்கப் போனாலும் சரி, கடற்கரைக்குக் 'காத்து'க் குடிக்கப் போனாலும் சரி, வழியில் வரும் வயது வந்தவர்கள் யாராயிருந்தாலும் அவர்களிடம் போய் "என் சார், உங்கள் வாக்கு யாருக்கு?" என்று கேட்டுவிடுவேன்!

எனக்கு நண்பர்கள் பல ரகங்களிலே உண்டு! சினிமாச் சிநேகிதர்கள், ரயில்வேத் தோழர்கள், காப்பிக்கிளப் காம்ரேட்கள், பஸ் ஃபிரண்ட்ஸ், ரோஷமான குத்துச்சண்டை நண்பர்கள்........ இப்படி—இப்படி ஏராளம்!

ஒருநாள் பஸ் ஃபிரண்ட் ஒருவரைச் சந்தித்தேன். அவர் பழங்காலத்துப் போர்வழி! என்னுடைய முதல் குத்து அவருடைய மூளையைத் தாக்கியது.

"சார்! உங்கள் வாக்கு யாருக்கு?" என்றேன். அவ்வளவுதான்! தாண்டவமாடிவிட்டார். கித்வாய் கோபத்திலே அவர் பேச ஆரம்பித்தார்.

"சார், என்ன ஆனாலும் சரி, என் உயிரே போனாலும் சரி, என்னுடைய வாக்கை அடுத்த வீட்டுக்காரனுக்கு மட்டும் ஒரு போதும் கொடுக்க மாட்டேன்."

போட்டாரே ஒரு போடு! அடுத்த வீட்டுக்காரருக்கும் அவருக்கும் என்ன சண்டையோ, யார் கண்டார்கள்? எப்போதுமே, பக்கத்து வீட்டுக்காரர்களுக்குள் பரஸ்பர அமெரிக்க—ரஷிய ஒற்றுமை! கேட்க வேண்டுமா? ஹூம், அவர் சொன்ன சொச்சத்தையும் கேளுங்கள்:

"என்ன சார், அவசரம் ஆத்திரம்னா மனுசனுக்கு ஒரு 'இது' வேணுமா? ஒரு அஞ்சு ரூபா 'கைமாத்து'க் குடுங்கன்னு கேட்டேன். கஞ்சப்பயல் இல்லேன்னு சொல்லிவிட்டான்."

"அது கெடக்குது விடுங்க சார், அந்த ஆசாமி தேர்தலில் நிற்கப் போகிறாரா என்ன?" என்று நான் கேட்டேன்.

"அவன் தேர்தலில் நின்றாலும் சரி, வராந்தாவில் உக்காந்தாலும் சரி, அந்தப் பயலுக்கு மட்டும் நான் ஓட்டுப் போடப் போவதில்லே" என்று 'கறாரா'கச் சொல்லிவிட்டார்.

●

சில்க் ஜிப்பா! கழுத்திலே 'தக தக'க்கும் தங்கச் செயின்! வலது கையிலே ரிஸ்ட் வாட்ச்! இடது கையிலே வில்ஸ் டின்! 'வில்ஸ் வேறு, நான் வேறா? எவன் சொன்னவன்?' என்று இராக மாளிகை கட்டும் அந்தத் தொண்டைமான் தோழரின் நிஜப் பெயர் சுயம்பிரகாசம் என்பது! என்னுடைய கேள்விப் புகையை அவர் முன்னாலும் ஊதினேன்! அவரும் பதிலுக்கு ஊதினார்! அந்தப் புகை மூட்டத்திலே நான் மூச்



சுத் திணறித் திக்குமுக்காடிப் போய்விட்டேன்!

"யாருக்கு ஓட்டுன்னு கேக்கிறிங்க! 'இவுனுக்குச் தான்'னு சொல்ல எவன் இருக்கான்! எல்லாம் மொள்ளமாரிங்க, மோசக்காரங்க, எலக்ஷன் வியாபாரிகள்! நல்லவன் நாணயஸ்தன்னு சொல்லனும்னு ஒரே ஒருத்தன் தான் இருக்கான். அவனுக்குத் தான் என் ஓட்டு." என்றார்!

"அந்த 'ஒரே ஒருத்தன்' யாரு சார்?" என்றேன் ஆவலோடு!

"அது நான்தான்" என்றாரே, அந்த வில்ஸ் பிராண்டு சுயநலம்!!

●

"உங்கள் வாக்கை யாருக்குத் தரப்போகிறீர்கள்?" என்று கேட்டதற்கு ஒரு தமிழ் வாத்தியார்—இப்போதிருக்கும் தமிழாசிரியரில்லே-இப்படிச் சொன்னார்:

"வாக்குத் தரின் தவறல் கூடாது! தவறுவோன் வாக்குத் தரக் கூடாது. நான் எப்போதும் வாக்குத் தவறுவதில்லே; எனவே, தருவதில்லே"

●

இன்னொருவர்! அவரும் வயது வந்தவர்தாம்! அவருக்குச் சுமார் அறுபது வயதிருக்கும்! அவரிடமும் என் கலாட்டாவை ஆரம்பித்தேன்! அந்தத் தாது வருஷத்துக் கிழடு 'ஓட்டு' என்றதும் "சீமை ஓடா, நாட்டு ஓடா?" என்று கேட்க ஆரம்பித்து விட்டது.

"இல்லே தாத்தா—இது, வாக்கு! உங்களுக்கெல்லாம் இப்பொழுது வாக்குரிமை வழங்கியிருக்கிறார்கள்! ஒவ்வொருவருடைய வாக்கும் ஒரு வைரத்துக்குச் சமம், அது நமக்குக் கிடைத்திருக்கும் சொக்கத் தங்கம்" என்று எப்படியோ வளைத்துச் சுற்றி அவருக்கு விளங்க வைத்தேன். அவர் நன்றாகத் தலையை ஆட்டிவிட்டு "அப்படீன்னு, அதை என்டாப்பா இன்னொருத்தனுக்குக் கொடுக்கணும்? நாமே வச்சுக்கப் படாதோ?" என்றார்! நான் தலையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தேன்.

●

ஊரெல்லாம் நான் கேள்வி கேட்டுக்கொண்டு திரிவது ஆசிரியருக்குத் தெரிந்து விட்டது போலும். ஒருநாள் ஆபீஸுக்குள் நுழையும்போதே அந்தப் பொல்லாத ஆசிரியர் "என்ன மிஸ்டர் கி...! உங்கள் வாக்கு யாருக்கு?" என்று என்னையே ஒரு தட்டுத் தட்டிவிட்டார்! ஆனால் நானா விடுபவன்! உடனே பதில் சொல்லிவிட்டேன்- "சார்! என்னுடைய ஓட்டு, ஒரு முட்டாளுக்குத் தான்" என்று. ஏனெனில் அவன் தான் நல்லது செய்யாவிட்டாலும் கெடுதலாவது செய்யாமலிருப்பான்!

—கில்லாடி.

1
ஏண்ணே, ரயில் வேலை நிறுத்தம் ரொம்ப சீக்கிரத்தில் நடக்கப் போகுதாமே?
2
3
18-8-51 முதல்
4
18-8-51 முதல் ரயில் வேலை நிறுத்தம்
5
18-8-51 முதல் ரயில் வேலை நிறுத்தம்
6
18-8-51 முதல் ரயில் வேலை நிறுத்தம் என்னும் நாடகம் நடைபெறும்

யாருக்கு உங்கள் வாக்கு?



***பன்னாள் .. அலைந்து, வரிசையில் ஊர்ந்து பெறும் ரேஷனை உண்ணும்பொழுது, கடை கடையாய்த்திரிந்து கள்ள விலைக்குத் துணிவாங்க நேரும் பொழுது, முன்னைக்காட்டிலும் இருமடங்கு செலவிட்டு மூச்சடக்கி நின்று ரயிலில், பஸ்ஸில் பிரயாணம் செய்யும் பொழுது, மண்ணில் விண்ணைச்சமைக்கும் ரஷ்ய — அமெரிக்க நாடுகளைப் பற்றி நான் அறியும் பொழுது என்ன எண்ணுகிறேன்? இவை என் தலைவிதி, 'அவன் செயல்' என்றா? அல்ல; அன்று, என் வாக்கைத் தொலைநோக்கில்லா மல்காங்கிரசுக்குஅளித்தோமே, அதன் பயனாய் 150 ஆண்டு அடிமை வாழ்விலும், காணாத–கேளாத கொடுமைகளுக்கு இன்று இரையானோமே என்று தான் துணுக்குறுகின்றேன்; துயரடைகின்றேன். மறுமுறையும் அத்தவறையே செய்வதா? முடியாது; கூடாது!

ஆ. தியாகராஜன்
சென்னை

●○●

"வோட்டு என்பது ரொட்டி, முட்டாள்கள் அதைக் குப்பைத் தொட்டியில் போடுகிறார்கள்" என்ற தொடர் நமது நாட்டு அரசியலமைப்பு முறைப்படி அண்மையில் நடைபெறவிருக்கும் மாபெரும் பொது (சதி)த் தேர்தலில் நிரூபிக்கப்பட்டு விட்டால் அது நாம் எதிர்பார்த்த முடிவே ஆகும். மக்களை முட்டாள்களாக்குவதற்காக ஆட்சி அமைப்பு முறையைத் குப்பைத் தொட்டியாக மாற்றி வைத்திருக்கும் நிலை நீக்கப்படும் வரை மேற்கண்ட முறைதான் நீடிக்கும். நடைபெறவிருக்கும் தேர்தல், "அடிப்படை உரிமைகளைப் பறிபோக விடாது பாதுகாக்கும்" என்ற துணிவு மக்களிடையே இன்னும் ஏற்படவில்லை. இந்த நிலையிலே துப்பாக்கி முனையிலே, சூழ்ச்சிப் பாசறையிலே, சதிக்கிடங்கிலே 'தேர்தல் நாடகம்' ந்டைபெறப் போகிறது. நாடகத்தை நடத்தப் போவதொல்லாம் 'அவர்கள்' தாம்! கடன் இழவுக்காக நாம் பங்குகொள்ள வேண்டியிருக்கிறது. நாடகத்திற்கு, நுழைவுக் கட்டணம் வாங்கும் வரைதானே நம் தயவு அவர்கட்குத் தேவை, அதைப்போல நமது வாக்குரிமைகளைப் பெற நம்முன் மண்டியிடுவார்கள், பல்லிளிப்பார்கள், பசப்புவார்கள் ....! அவர்களுடைய திறமையை எடைபோடும் துலாக்கோல்தான்

*** ரூபாய் மூன்று பரிசு பெற்ற கடிதம்.

தேர்தல்... அதைவிட்டுத் தேர்தலை நம் உரிமையை விலைபேசும் வண்ணிகச் சந்தையாக மாற்றியிருப்பதுநம்மைப் பொறுத்தது! வாய்ப்பந்தலுக்கு வளைந்து கொடுக்காத தன்மைநம்மிடையே நிறைய வேண்டும். அடுத்தாற்போல் ஸ்விட்சர்லாந்து, ஆஸ்திரேலியா, மேற்குஜெர்மனி முதலியநாடுகளில் உள்ளது போல 'குடி ஒப்பமுறையும், வாக்காளர் முனைப்பை'யும், நிலைநிறுத்த நமக்கு ஆவன செய்வதாக வாக்களிப் போருக்கே நமது வாக்குகளை வழங்குதல் வேண்டும்.

S. குழந்தைநாதன் B. A.,
காரைக்குடி

●○●

நான் ஒரு மாணவன் என்ற முறையில் என்னுடைய கருத்தினையை வழங்குகிறேன். மனிதர்களின் உரிமை பறிக்கப்படும் என்ற பயம் இல்லாமல் உண்மைச் சுதந்திரம் நாட்டில் நிறுவப் பாடுபடுபவரும், சீர்திருத்த முன்னேற்றக் கருத்துக்கள் நிறைந்தவரும், எக் கட்சியிலும் சேராதவருமான தனிப்பட்ட நபருக்கு, என்னுடைய வாக்கை அளிக்க ஆசைப்படுகிறேன்.

K. அங்கணன்
பெரியூர்

●○●

தேர்தல்—மக்கள் இன்பமாக வாழ வழிசெய்யும் பொருட்டு ஏற்பட்ட செயல்முறை வார்த்தைகளின் பின்னல். தற்சமயம், காங்கிரஸிலிருந்து துகள் துகளாகப் பிரிந்தவர்களுக்கு இது ஒரு வகையில் அரிய சந்தர்ப்பம். தங்களுடைய பண பலம், கையாட்களின் எண்ணிக்கை, பத்திரிகை விளம்பரங்கள், இத்துணைகொண்டு, "ஒருவர்க்கொருவர்" பலப்பரீட்சை பார்ப்பதற்குச் சரியான வாய்ப்பே தவிர, மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் போட்டி போட்டுக்கொண்டு உயர்த்தும் நோக்கத்தாலல்ல. இந்தத் தேர்தலில் நியாயமும் நேர்மையும் காண முடியுமா என்பது பெருத்த சந்தேகமே. தேர்தலின் முழுப் பயனை இந்தத் தேர்தலால் எவரும் காண முடியாது. இந்தத் தமிழ் நாட்டில் வாழ்ந்துகெட்ட இனம் தாங்கள் யார் என்று மறுபடியும் பூரணமாக உணராதவரை, உணர முடியாதபடி 'முட்டுக்கட்டைகள்' இருக்கும்வரை, அவைகளுக்கு உயிர்கொடுக்கும் நடைப் பிணங்கள் இருக்கும்வரை, "நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம்; இது நமக்கே உரிமையாம் என்பதும் தெரிந்தோம்—" என்ற உண்மைபெற இந்தத் தேர்தல் உதவாது.

' ஓர் தமிழன் '
தியாகராயநகர்

●○●

கையொப்பமிடவே தெரியாத 82 சதவீதமுள்ள மக்கள் யாருக்கு வாக்களிப்பது என்று சிந்திக்கும் நேரத்தில், சில இயக்கங்கள் பணத்தைக் காட்டிப் பணியவைக்கவும் நினைக்கக்கூடும். ஆகையால் ஒவ்

வொரு வீதியிலுள்ள படித்த — அரசியலனுபவமிக்க பெரியோர்கள் அவ்வீதியிலுள்ள படிப்பற்ற மக்களுக்கு 'வாக்களித்தல் முறையை'க் கற்பித்தல் மிகமிக நல்லது.

மயிலை. பா. சீனிவாசன்
சென்னை

●○●

தேர்தல் என்பது அரசியல் திருவிழா! ஆனால் உங்கள் வாழ்வின் ஒளியும், உங்கள் வாழ்வின் இருட்டும் தேர்தல்தான் என்பதை உணர்வீர்களானால் சீட்டைப் பெட்டியில் போடுமுன் 'யாருக்கு என் வோட்டு?' என்று சிரத்தையுடன் சிந்தியுங்கள். சிசிரோவின் (Cicero) சீடனைப்போல, பர்க்கின்(Burke) பரம்பரை போலப் பேசுபவர்கள், உங்களிடம் வருவார்கள்; ஏமாந்து விடாதீர்கள்! உங்கள் ஓட்டுக்களைத் தன்னலமற்றவர்களுக்குப் போடுங்கள்; சக்திக்கேற்ற உழைப்பு — தேவைக்கேற்ற வசதி எனும் பண் இசைப்பவர்களுக்குப் போடுங்கள். திராவிட நாட்டைச் சுரண்டுவாரற்ற குடியரசாக்கப் பாடுபடுபவர்களுக்கே போடுங்கள்.

V. நாகசுந்தரம்
மதுரை

●○●

இந்தத் தேர்தலுக்காகச் செலவிடும் நேரத்தையும், பணத்தையும் நாட்டிலே நடமாடும் ஜாதி — மத சமய பேதங்களை ஒழிக்கச் செலவிட்டால் நாடும் நலம்பெறும், மக்களும் மகிழ்வர். இந்த எண்ணம் உயர்ந்தது. ஜாதி ஒழிய இந்தத் தேர்தல் பயன்படுமானால் நான் அதை வரவேற்கிறேன். ஜாதி ஒழியவும்,மதம் மடியவும் அதன் மூலமாக 'ஒன்றே குலம்' என்ற உயர் கொள்கையைப் பரப்பவும், எண்ணங்கொண்டவர் எவரோ, அவருக்குத்தான் என் வாக்கு.

ந. தருமலிங்கம்
முத்துப்பேட்டை

●○●

எந்தக் கட்சியானது கார்ல் — மார்க்ஸ் திட்டத்தை முடிந்தவரை செயலாற்ற முன் வருகிறதோ — எந்தக் கட்சி சரியான எதிர்க்கட்சி இருக்க வேண்டுமென விரும்புகிறதோ — எந்தக் கட்சி ஆரியத்தின் வஞ்சக வேலைகளுக்கும் சூழ்ச்சிகளுக்கும் அஸ்தமனம் தேட முனைகிறதோ — எந்தக் கட்சி கம்யூனல் ஜீ. ஓ. வை மீண்டும் செயற்படுத்த விரும்புகிறதோ — எந்தக் கட்சி திராவிடத் தனியரசை ஆதரிக்கிறதோ — அக் கட்சிக்கே என் வாக்கு.

தாயுமானசாமி
நத்தம் அபிராமம்

●○●

வரப்போகும் தேர்தலானது திராவிடஸ்தான் அமைப்பு உருவாக்கப்படுவதற்கான ஒரு வாய்ப்பாக இருக்குமென்ற எண்ணத்துடன் திராவிடராகிய ஒவ்வொருவரையும் வாக்காளராகப் பதிவுசெய்து வைத்த பெருமை திராவிட இளைஞர்களைச் சாருவதாகும். ஆனால்

எதிர்பாராதபடி திராவிட இயக்கத்தார் அரசியல் சன்னியாசம் வாங்கிக்கொண்டு விட்டதானது வருத்தத்தையும் ஏமாற்றத்தையும் கொடுப்பதோடு சுதந்திர திராவிட எழுச்சியின் வேகத்தைத்தடைப்படுத்துவதுமாகும். திராவிட இயக்கத் தோழர்கள் தங்கள் வாக்குகளை வீணர்களுக்கும், வம்பர்களுக்கும் கொடுக்காமல் தேர்தலைப் பகிஷ்காரம் செய்து திராவிடஸ்தான் அமைப்பில் தாம் கொண்டுள்ள ஆர்வத்தை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அரசினருக்கும் நாம் தேர்தலைப்பற்றிக் கொண்டுள்ள அதிருப்தியையும் காட்டிக்கொள்ளவேண்டும். இம் மாபெரும் செய்கையானது திராவிடநாடு அமைப்பை வெகு விரைவில் உருவாக்கி விடும். ஆகவே வரப்போகும் தேர்தல் நாடகமானது திராவிடர்களால் பகிஷ்கரிக்கப்பட வேண்டியதாகும்.

கோ. குமாரசாமி
சென்னை

●○●

...மக்களிடையே நேர்மையான கண்ணோட்டத்தை உண்டாக்கிவரும் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான். இதற்குள்ள மக்கள் சக்தி தமிழ்நாட்டில் வேறு எந்தக் கட்சிகளுக்கும் இல்லை என்று சொல்லிவிடலாம். மக்களின் காதுகளும் இவர்களது எண்ணத்தை எதிர்நோக்கிக் கொண்டுள்ளன. எனவே திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் கலந்துகொள்ளப்போவதில்லை என்ற எண்ணத்தை மாற்றிக்கொண்டு, அண்மையில் நடைப்பெறப்போகும் மாநாட்டில் ஒரு நல்ல திட்டம் தீட்டி மக்கள்முன் வைத்துக் கட்டுக்கோப்புடன் வேலை செய்தால் காங்கிரசையும், வேறு இயக்கங்களையும் முறியடித்து நல்ல ஆட்சியை நிறுவமுடியும். ஆகவே என்னுடைய வாக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே!

பொன். கு. கோதண்டபாணி
சென்னை

●○●

பசி தாளமுடியாமல் பதறித் துடிக்கும் ஜீவன்களைக் கண்டு புன்னகை புரிகிறேன். பசியாலேயே உயிர் நீக்கும் எதுமற்ற பிண்டங்களைப் பார்த்து இதயத்தை இரும்பாக்கிக் கொண்டு சிரிக்கிறேன். ஆனால், கருவிலேயே சிதைக்கப்பட்ட ஜீவன், உருவாகியபின் உருக்குலைக்கப்பட்ட உயிர், வயிற்றில் உருவாகி விட்டதை ஊரார் அறிந்து அவச்சொல் வீசுவதைச் செவிமடுக்க முடியாமல், தளிவிஷம், சாண் கயிறு, குளம், குட்டைகளை நாடிச்செல்லும் இளம் விதவைகளின் சோக மூச்சு—என்னை இரத்தக் கண்ணீர் வடிக்கச் செய்கிறது. இந்தச் சோகச் சித்திரத்தைச் சமுதாய தியேட்டரில் காண முடியாமல் எவனொருவன் தடுப்பதாக உறுதி கூறுகிறானோ அவனுக்கே என் வாக்கை அளிப்பேன்.

K. M. அங்கப்பன்
மேட்டுப்பாளையம்

நாவல் ரூ. 1-0-0

நிலவினிலே
அகிலனின சிறுகதைகள் ரூ. 2-0-0

இன்ப நினைவு
அகிலனின் நாவல் ரூ. 1-0-0

ஆண் பெண்
அகிலனின் சிறுகதைகள் ரூ. 1-8-0

அன்பின் உருவம்
மாயாவியின் நாவல் ரூ 1-8-0

கவிதை ரூ. 1-0-0
விற்பனைக் கழிவு 25%

பழனி பிரசுரம்
மணிக்கூண்டு .. புதுக்கோட்டை

புதிய வெளியீடுகள்.

மனைவி மாற்றம் 0-8-0
(அன்புமணி)
அன்னியன் 0-8-0
(ரா. தணலன்)
அழகியின் ஆசை ,, 0-4-0
நாடோடிக் காதல் 0-6-0
(கார்க்கி)
ரஸ்புடின் 0-8-0
(ஊடுருவி)
நாம் இருவர் 0-3-0
(ஆசைத்தம்பி)
ஓய்வு நேரம் 0-2-0
(சி. என். ஏ.)
ஆலையூரார் உபதேசம் ,, 0-12-0
காந்திஜி—மார்க்ஸ்
சந்திப்பு? 0-4-0
144 0-8-0
(சுப்பு—ஆறுமுகம்)
எல்லைக்கு அப்பால் 0-8-0
(டி. கே. சீனிவாசன)
துன்பக்கதை ,, 0-8-0
ஆண்களுக்கு
ஆபத்து 0-4-0
உணர்ச்சிமாலை 0-8-0
(மு. கருணாநிதி)
திருக்குறள்
திருத்திற்று 0-2-0
(பூவண்ணன்)

○

இதர வெளியீட்டுப் புத்தகங்களும்
கிடைக்கும.

வியாபாரிகட்கு 25% கழிவு உண்டு.

○

—:விவரங்கட்கு:—

செல்வ நிலையம்
110, A. P. ரோடு .. சென்னை-7

மகத்தான ஆதரவுடன் விற்பனையாகிறது!

ஜெகசிற்பியன் எழுதிய

வாடகை கணவன்

(அழகிய முகப்பு! அதிகமான பக்கங்கள்!)

விலை அணா நான்குதான்.

சொற்பப் பிரதிகளே கைவசம் உள்ளன. உடனே விண்ணப்பித்துக்கொள்ளவும்.

எல்லா ஊர்களுக்கும் உடனே ஏஜண்டுகள் தேவை!

ஏஜெண்டுகளுக்கு 25% கமிஷன் தரப்படும். தேவையான பிரதிகளுக்கு முன்பணமனுப்பியோ அல்லது வி. பி. பி.யிலோ விண்ணப்பிக்கவும். 25 பிரதிகளுக்குக் குறைந்த ஆர்டர் கவனிக்க இயலாது. தனிப் பிரதி வேண்டுவோர் ஐந்தணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

விவரங்களுக்கு :

அன்பு பதிப்பகம்

த. பெ. எண். 1003

கீழ்ப்பாக்கம் :: சென்னை—10

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
197298
சென்னை-600 008

Telegram: 'PUNTCOMPANY'

Telephone: 55085

பண்ட் & கம்பெனி

(ESTD : 1890)

உறுதியான தோலினால் அழகான சூட்கேஸ், மணிபர்ஸ், ஸ்லிப்பர்ஸ், சாண்டல்ஸ், பெல்ட் முதலியன நாங்கள் செய்கிறோம். உங்கள் தேவைக்கு எழுதுங்கள்.

PUNT & COMPANY

CHROME LEATHER WORKS

170, BROADWAY, G. T. MADRAS.

K.P. கேஸ்ட்ராயில்

தனி சித்தாமணக்கு விதையிலிருந்து தயார் செய்தது. குமட்டல், கசப்பில்லாதது. குழந்தை முதல் விருத்தர் வரை உபயோகிக்கலாம். ரசாயன முறைப்படி தயார் செய்யப்பட்டது.

K.P. கேஸ்டர் ஆயில் ஒர்க்ஸ்

ஆர். எஸ். புரம்.... கோயமுத்தூர்.

Edited, Printed and Published by MURUGU SUBRAMANIAN for PONNI LTD at PONNAGAKAM, 16, Seni Amman Koil Street, Tondiarpet, Madras—21.

உலக அரங்கில் ரூ. 1—0—0

தோழர் டி. கே. சீனிவாசனின் சிந்தனை அரங்கிலே நடம்பயிலும் சிறுகதைகள், உலக அரங்கிலே உயிர் பெற்று உலவுகின்றன. ஒப்பற்ற கருத்துக் களஞ்சியம். சிந்தனைச் செல்வம்.

★

கடல் முத்து ரூ. 1—0—0

இலக்கியக் கடலிலே மூழ்கி எடுத்துக் கோத்த உன்னத கதை முத்துக்களை நண்பர் ஆறுமுகம் மக்களுக்கு வழங்கியுள்ளார். கடல் முத்தால் கிராமிய உலகம் ஒளிபெறுகிறது. உள்ளமும் உணர்வும் ஒருங்கே இசைவுறும் கதைக் காவியம்.

★

நினைவுச் சின்னம் ரூ. 1—0—0

தோழர் இளமைப்பித்தனின் மூன்றாவது சிறுகதைத் தொகுதி இது. கருத்தாழங் கொழிக்கும் கலைச்சின்னம்; தமிழகம் கண்ட தணியாத கலையார்வத்தின் நினைவுச் சின்னம்.

★

தபாலாபீஸ் விநோதங்கள் அணா 8

தபாலாபீஸ் சகல மூலைகளும் குவியும் கூடம். அங்கு நடக்கும் திருக்கூத்துக்கள் ஒன்றல்ல, ஆயிரம். அதன் இனிய படப் பிடிப்புத்தான் நண்பர் க. சண்முகசுந்தரம் தீட்டியுள்ள கட்டுரைகள். இனிய சுவை செறிந்த ஓவியம்!

★

விபரமான விலைப்பட்டியலுக்கு எழுதுங்கள்.

★

பொன்னி லிமிடெட்

16, சேணியம்மன் கோவில் தெரு

தண்டையார்ப்பேட்டை — சென்னை-21.

தமிழ்
நாடெங்கும்
விரைவில்
வருகிறது
K.S.பிக்சர்ஸ்
...சிட்டி ரிலீஸ்...
டைரக்ஷன்
N.S.கிருஷ்ணன்
எனெஸ்கே பிலிம்ஸ்
மணமகள்
மூலக்கதை
முன்ஷி பரமுபிள்ளை
திரைக்கதை.வசனம்
மு.கருணாநிதி
சங்கீதம்
C.R.சுப்பராமன்
பாடல்கள்
உடுமலை நாராயண கவி
BALU BROS